“ஈசன் நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம்”


ஐப்பசி - கார்த்திகை - மார்கழி 1999

# கலசம்
# KALASAM



லண்டனிலிருந்து வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ் £1.00

# JAS South Indian Instruments



Khol D174



Mirdangam D171



Tavil D178



S130S S130L
Nathaswaram



Violin



Uduku D181



Khanjira D179

## JAS Musicals Limited

**Manufacturers, Importers, Exporters, Distributors, and restorers**

**Tel: 0181 574 2686 Fax: 0181 571 7445** www.jas-musicals.com

மணி 8 ஈசன் நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம் ஒலி 28

கலசம்

KALASAM

ஐப்பசி-கார்த்திகை-மார்கழி 1999

# மதமாற்றம் மனதை மாற்றுமா?

இருபத்தியெட்டாவது கலசத்தின் இனிய இதழ்களை நீங் கள் பார் த்துக் கொண்டிருக்கிறீர்கள். அதுவும் இன்னும் சில வாரங்களுக்குள் வரப்போகின்ற இரண்டாயிரம் ஆண்டுக்குமுன் வருகின்ற ஆயிரத்துத் தொள்ளாயிரத்தின் கடைசி இதழ் இது. சமயம் பற்றிய சிந்தனைகள் கருத்துக்கள் காலமாற்றங்களினால் அருகி வரும் இவ்வேளையில் சமயத்துக்கென்றே தனித்துவமாக வருகின்ற அதுவும் இலண்டன் மாநகரில் வருகின்ற இதழ் என்ற மனோபலத்தில் மனதைவிட்டுக் கதைக்கலாம் என்று நினைக்கின்றேன்.

சமயம் இதுதான் என்ற பாரம்பரியக் கண்ணோட்டத்திலிருந்து விலகி சிறிது சமூகத்துக்குள் சமயத்தை நுழைத்திருக்கின்றேன். சமூகம் இல்லாமல் எப்படி சமயம் இருக்கமுடியும்? முடியாது என்ற ஆணித்தரமான கருத்தை அன்போடு கலசம் உங்களுக்குக் கூறியிருக்கின்றது. தேவைக்கதிகமாக அலட்டாமல் நியாயமாகச் சிலபல விடயங்களை கலசம் அலசி ஆராய்ந்திருக்கின்றது. சில பழையவர்கள் பதகளித்து வேதனைப்பட்டிருக்கிறார்கள். என்ன செய்வது உங்கள் உள்ளங்களைத் தேற்றுவதும் மாற்றுவதும் உங்கள் கடமையே! ஏனென்றால் கலசம் தன்னை மாற்றிக் கொள்ளாது! எங்கள் மண்ணில் மதமாற்றங்கள் வேகமாக நடைபெறுவதாகவும் இதற்குப் பொருளாதாரத் தேவைகளே காரணம் என்றும் அங்கிருந்து இங்குவந்துபோகும் பல சைவ அன்பர்கள் வேதனை கொள்கின்றார்கள். நியாயமான வேதனைகள் தான்!!

கலசத்தைப் பொறுத்தவரை மதமாற்றம்பற்றி நிரம்பக் கதைக்கும் கொள்கை இல்லை. தேவைக்காக மாறிக்கொள்பவர்கள் தேவைக்காகத் தொடர்ந்து மாறிக்கொண்டேயிருப்பார்கள். ஒரு நாட்டிலே ஆயுதப்போர் நடந்து கொண்டிருக்கும்போது மக்கள் அதைப்பயன்படுத்தி பொருளாதாரத்தேவைகளுக்காக அயல்நாடுகளுக்குச் செல்வதுபோல்தான் இம் மதமாற்றங்களும். இவை உண்மையான மதமாற்றங்கள் அல்ல. மதத்தின்மீது வெறுப்புக்கொண்டு தத்துவரீதியாக மதத்தை வெறுத்து இன்னொரு மதத்தின்மீது தத்துவ ஈடுபாடு கொண்டால் அதனை மதமாற்றம் என்று நாம் கூறலாம். ஆனால் இறைவனைத் தேடக்கூடிய மார்க்கங்களை மனிதன் தேர்ந்தெடுக்கக்கூடிய சுதந்திரம் ஒவ்வொரு மனிதனுக்கும் இருந்தாகவேண்டும். ஆதலால் குறுகிய மனத்தோடு சிந்திப்பதை விடுத்து பரந்தமனத்தோடு சிந்தித்து நாம் சார்ந்த மார்க்கத்தை நலம்பெறச் செய்வோம். மதமாற்றத்தால் மனங்கள் மாறுபடாதவரை அவற்றையிட்டுக் கவலைகொள்வதைவிட்டு நற்காரியங்கள் புரிவோம்.

மு. நற்குணதயாளன்
ஆசிரியர்

ஈசன்நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம்

**கலசம் - 28**

ஐப்பசி - கார்த்திகை - மர்கழி 1999

# உள்ளே................


| | |
|---|---|
| பத்துமலை முருகன் | 3 |
| நாம் பல நு ற்றாண்டுகளாக ....... | 5 |
| அர்த்த நாரீசுவர தத்துவம் | 7 |
| வடமராட்சி தென்புலோலி ..... | 13 |
| சித்திரதேர் திருப்பணி காணும் .... | 14 |
| பிரமன் மட்டுந்தானா, பொய்யன்? .... | 15 |
| சிறுவர் கலசம் | 17 |
| ரட்சை தருசிற்றடிகள் | 25 |
| அறப்பணிகளில் ஆலயங்கள் | 27 |
| சைவ சமயக் கொடி "நந்தி" | 29 |
| திருக்களிற்றுப்படியார் | 31 |
| இங்கிலாந்திலுள்ள சைவக் .... | 34 |


ஆசிரியர் : திரு. மு. நற்குணதயாளன்
துணை ஆசிரியர்: திரு சி. அற்புதானந்தன்
நிர்வாகம்: திரு வ. இ. இராமநாதன்
உதவி நிர்வாகம்: திரு சிவ. அசோகன்
நிர்வாகக்குழு:
திருமதி தமிழரசி சிவபாதசுந்தரம்
திரு. ந. சிவராசன்
திரு. S.தர்மலிங்கம்
Dr. N.நவநீதராசா
திரு இ. சிவானந்தராசா
திரு. S, சிறீரங்கன்
திரு. பாலரவீந்திரன்

தொடர்பு முகவரி:
***49 Marlands Road, Clayhall, Ilford, Essex, IG5 0JD England***
***Tel: 0181 550 4233***
***Fax: 0181 550 4233***

கலசத்தில் வரும் ஆக்கங்களின் கருத்துக்களுக்கு ஆக்கதாரர்களே பொறுப்பாளராவர். கட்டுரைகளை நிராகரிக்கவோ திருத்தவோ ஆசிரியர் குழுவுக்கு உரிமை உண்டு. பெயர், முகவரி இல்லாது வரும் கட்டுரைகளோ மற்றும் கடிதங்களோ கவனத்திற் கெடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

இலங்கையில் தொடர்பு:
Mr. K. Balasubramanium, 131 Sangamitha Mawatha, Colombo 13, Colombo

ஜேர்மனியில் தொடர்பு:
Mr. K. Parameswaran, Alte-Aakob Str 134, 10969 Berlin, Germany Tel: 030 251 0209

டென்மார்க்கில் தொடர்பு:
Mr R. Rajendran, Bjergmarken 21, St TV 4300 Holbeck Denmark

கனடாவில் தொடர்பு:
Mr. Siva Thirunavukarasu, 25 Thunder Grove, Apt 1512 Scarborough,Ontario Tel: 416 412 3883

மதிப்புக்குரிய துன்னையூர் ராம் லோகேஸ்வரக் குருக்கள் அவர்கள் மனமுவந்து இலங்கையில் கலசத்துக்கான பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டுள்ளார். கட்டுரைகள் அனுப்புவோர் சந்தாதாரராக விரும்புவோர் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

**428 R.A. De Mel. Mawatha, Colombo 3**
**Tel: 576283**

# பத்துமலை முருகன்



முருகனுக்குத் தமிழ் நாட்டில் பழனிமலை என்றால், மலேசியாவில் பத்துமலை. 272 படிகள் ஏறிச் சென்றால் மலை உச்சியில் உள்ள குகையில் முருகப் பெருமான். எழுந்து அருளியுள்ளதைக் காணலாம். 1888ல் பத்துமலையில் முதன் முதலாக வேலை வைத்து வணங்க ஆரம்பித்தார்கள். ஆண்டு தோறும் குமரனுக்குரிய தைப்பூசத் திருநாளைப் பொலிவுடன் கொண்டாடுவதென திட்டமிட்டனர். பத்துமலையில் இந்துக்கள் கோவில் எடுத்தார்கள் என்பதனை அறிந்த கோலாலம்பூர் மாவட்ட ஆட்சியாளர் அந்த வேலைப்பிடுங்கி எறியக் கட்டளையிட்டார்கள். பாட்டாளி மக்கள் வெகுண்டெழுந்து வழக்குத் தொடுத்தனர். வேலுக்குத்தானே வெற்றி கிடைக்கும். கிடைத்தது. மக்களே வெற்றி பெற்றனர். பத்துமலைக் கோவில் இந்துக்களின் வழிபடு தலமாக வளர்ந்தது. ஞானமே வடிவமாகிய ஞானபண்டிதனது ஞான பீடமாக மலர்ந்தது. தேசிய முதன்மை பெற்ற விழாக்களில் ஒன்றாகத் தைப்பூசத் திருநாள் தழைத்தது.

1920ல் பத்துமலைக் குகைக் கோவிலுக்குச் செல்லப் படிக்கட்டுக்கள் அமைந்தன. இந்த 272 படிகளைக் கட்டுவதற்காகவும் திருப்பணிக்காவும் பாட்டாளி மக்கள் பலரும், ஒரு நாள் ஊதியத்தினை உவப்புடன் கொடுத்தனர். 1952ல் வைகாசி விசாக உபயத்தார் சார்பில், பத்துமலைப் படிக்கட்டுகளுக்கு மின் விளக்கு அமைக்கப்பட்டது.

சித்திரக் கோபுர வாயில்கள் பத்துமலை அடிவாரத்திலும், மலை உச்சியிலும் 1967 ஆம் ஆண்டில் சித்திரக் கோபுர வாயில்கள் எழுப்பப்பட்டன.

கோலாலம்பூர் மாநகரிலிருந்து 7 கல் தொலைவில் இருக்கும் பத்து மலைத் திருத் தலத்திற்கு இரதத்தில் வீற்றிருந்து செல்லுகின்ற அருள்மிகு முருகன், இம்மண்டபத்தில் அமர்ந்து பக்தர்களுக்குக் காட்சி தந்து, தைப்பூச உற்சவம் முடிந்ததும் மீண்டும் அன்னை இல்லம் நோக்கித் திரும்புகின்ற பொது மக்கள் வசதிக்காக முருகனை வழிபடுவதற்காக





இந்த மண்டபம் கட்டப்பட்டுள்ளது.
உலகப் பொது மறையாகக் கருதப்படும் திருக்குறளை உலகறியச் செய்யும் உன்னதப் பணியை மேற்கொள்வது எங்கள் கடமை. அதற்காகக் குகையைத் தேர்ந்தெடுத்து, நடு நாயகமாக வள்ளுவர் சிலையை வைத்து, சுற்றிலும் *1330* குறட் பாக்களையும், *133* பளிங்குக் கற்களில் வடித்துள்ளனர். *5* அடி உயரத்தில் கருங்கல்லில் திருவள்ளுவர் சிலை வடிக்கப்பட்டுள்ளது. பத்துமலை மேற்குகையில், மூலத்தானத்திற்குப் பக்கத்திலுள்ள சமதளத்தில், அருள்மிகு வள்ளி, தெய்வானை உடனுறை முருகர் கோவில், பக்திப் பரவசம் ஊட்டும் கோபுர சிற்ப வேலைப்பாடுகளுடன் அமைந்து கண்ணையும் கருத்தையும் கவர்கிறது.

பத்துமலை மேற்குகையில் தமிழகத்தில் உள்ள திருமுருகனின் திருத்தலங்களான ஆறுபடை வீடுகளைச் சித்தரிக்கும் திருவுருவக் காட்சிகள் மிகவும் அற்புதமான முறையில் அமைக்கப் பட்டுள்ளன.

பத்துமலை ஆலயம் ஒரு புதுமையான இடம் இதை எல்லோரும் பார்க்க வேண்டும் என்பதே எனது விருப்பம்.

# கலசம் 2000

ஜனவரிமாதம் கலசம் 2000
வெளிவரவுள்ளது. பல மாற்றங்கள் பல
புதுமைகள் நிறைந்த இக்கலசம் பல பு
ஒழுங்கமைப்புக்களுடன் வெளிவரவுள்ள
என்பதையும் மகிழ்வோடு தெரிவித்துக்
கொள்கின்றோம். இக் கலசத்தில் தங்க
படைப்புகள் வெளிவர விரும்புவோர்
உடனடியாக ஆக்கங்களை அனுப்பி
வைக்குமாறு அன்போடு
வேண்டுகிறோம்.அனைவரும் கலந்து
கொண்டு சிறப்பிக்குமாறு அன்போடு
வேண்டுகின்றோம்.

**கலசம் குழுவினர்**

சைவ முன்னேற்றச் சங்கம்
UNITED KINGDOM
கலசம்

மதக் கோட்பாடுகளும் தத்துவங்களும் ஒழுக்க நெறிகளும் வகுத்தாகிவிட்டது. உலகில் தர்மமும் அதர்மமும் மாறி மாறி அழுத்தம் கொடுக்கிறது. மதம் மக்களிடையே தாக்கங்களை ஏற்படுத்துகிறது. விளைவுதான் என்ன? மட்டும் கடைப்பிடித்து வருகின்றோம். சமயம் முக்திக்கு வழி தேடுவதோடும் நின்று விடுவதில்லை. இல்வாழ்வுக்கும் வழிகாட்டுகிறது என்பதை நாம் உணருகிறோமா? இன்று எமது சமூக நிலையை எத்தனைபேர் உணர்கின்றோம். அறநெறி எனப்படும் நடைமுறை ஒழுக்கம் வேண்டும். நோயாளிக்கு மருந்தாகிய நல்ல அறிவொளி தரும் நல்ல போதனைகள் வழங்கப்பட வேண்டும். போதனை வழங்கினால் மட்டும் போதாது அதை செயல்படச் செய்ய வேண்டும். இப்போது எமக்கு வேண்டியதெல்லாம் செயல்பாடு தான்.

# நாம் பல நூற்றாண்டுகளாக முழங்கிக் கொண்டும் கேட்டுக் கொண்டும் இருக்கிறோம்! செயல்பாடு எப்போது?

**அடியார் விபுலானந்தா — கனடா**

மதங்கள் ஆற்றவேண்டிய பணி என்ன? மக்கள் உலக ஆசை அலைகளினால் தள்ளப்பட்டு அறியமுடியாமை ஆகிய அறியாமை நிலைக்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தாழ்ந்த நிலையில் இருந்து உயர்ந்த நிலைக்குச் செல்வதற்காக மக்களுக்கு வழிகாட்டுவதே மதங்களின் பணியாகும். நாம் ஒவ்வொருவரும் இன்று எந்த நிலையில் உள்ளோம். அதாவது மதங்கள் கூறுகின்ற அறநெறியில் வாழ்கின்றோமா? இன்று எமது மனங்கள் தூய்மை பெற்றுள்ளனவா? மதங்கள் தூய்மையை வழியுறுத்துகின்றன. நோக்குவதற்கு அரியவனும் நுண்ணுணர்வானவனும் ஆகிய இறைவனை உள்உணர்வால் அறிந்தவர்களால்தான் மத போதனைகளைச் செய்ய முடியும். இதைவிடுத்து ஆன்மீக உணர்வு இல்லாமல் நாவன்மையும், ஞாபகத்திறனும் கொண்டவர்களால் செய்யப்படும் போதனைகள் மக்களுக்கு நன்மையைக் கொடுக்குமா?

நாம் பல நூற்றாண்டுகளாக போதனைகளைக் கேட்பதிலும், மேடை முழக்கங்களைக் கேட்டுக் கைதட்டுவதிலும் காலத்தைக் கடத்தி வருகிறோம். ஆலய வழிபாடுகள், பூசை, திருவிழாக்கள், விரதங்கள் ஆகியவற்றை எம்மிடமிருந்து விலகியுள்ளதை எம்மில் எத்தனைபேர் உணர்கிறோம்?

இல்வாழ்வு எனும் புனித இயக்கமான குடும்ப உறவுக்குள் விவாகப்பதிவு, விவாகரத்து என்னும் சட்ட அதிகாரங்கள் நுழைந்துள்ளது. கோவிலாக இயங்கவேண்டிய குடும்பங்கள் பல சீரழிவுக்குள் போய்க் கொண்டிருப்பதை நம்மில் எத்தனைபேர் உணர்கிறோம்? மனித வாழ்வின் முக்கியமான அம்சம் குடும்ப வாழ்வு? குடும்பத்தில் இல்லற நெறிகள் என்று சொல்லப்படும் குடும்ப ஒழுக்க நெறிகளை விளக்கம் அறிந்து செயல்படுத்தும்போது அங்கு புனிதம் வெளிப்படும், இல்லம் மங்களமாகவும் செழிப்போடும் துலங்கும். இல்லறத்தை நல்லறமாக முடித்தபின்பு வானப்பிரஷ்தமோ சன்னியாசமோ தவமோ செய்யலாம். இல்லத்தைக் கோவிலாகவும் வீட்டில் உள்ள அனைவரும் தெய்வத்தின் பிரதித் திருஉருவங்கள் எனும் உணர்விலே செயல்படுவதுதான் உண்மையான சமய அனுட்டானம், இவற்றினை வழிகாட்டிச் செயல்பட வைப்பதுதான் உண்மையான சமய சேவை.

எமக்கு வேண்டியதெல்லாம் எமது மனங்கள் பண்படுத்தப்பட மூன்றுவிதமான வைத்தியர்கள் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவகையினர் மருந்தை எழுதிக் கொடுத்து வாங்கிக் குடிக்கச் சொல்லுவார்கள். இரண்டாவது வகையினர் மருந்தைக் கையில் கொடுத்து விடுவார்கள். மூன்றாவது வகை வைத்தியர்கள் மருந்தை நோயாளிக்குப் பருக்கி வருத்தம் மாறும்வரை ஆர்வத்தோடு கண் காணிப்பார்கள். இம்மூன்று வகை வைத்தியர்களில் மூன்றா வதாகச் சொல்லப்பட்ட வைத்தியர்களே மேலானவர்கள். இதைப் போன்றுதான் எமக்கு மத போதனை தேவைப்படுகிறது. மக்களுக்கு போதனை அளிப்பவர்களைவிட, போதனையோடு மக்களை செய்பாட்டில் தூண்டும் உண்மையான மத சேவை செய்யும் உத்தமர்களே எமக்குத் தேவைப்படுகிறார்கள். வழிகாட்டுபவர்கள் மக்களைத் தேடிச் சென்று, மக்களின் இல்லங்களுக்குச் சென்று போதனை செய்யும் மனத்தூய்மை கொண்ட உண்மையானவர்களே தேவைப் படுகிறார்கள். புத்தரும், யேசுநாதரும், விவேகானந்தரும் மேலும் பெரிய ஆசாரியார்களும் மகான்களும் மக்களைத் தேடிச் சென்று போதனையளித்தார்கள், இவர்கள் மக்கள் தங்களைத் தேடி வரவேண்டும் என்று விரும்பியதே

இல்லை. மக்கள் ஆச்சிரமங்களை நோக்கிச் செல்வதைவிட ஆச்சிரமங்களில் இருந்து மக்களை நோக்கி நல்ல போதனைகளும் செயல் பாடுகளும் செல்ல வேண்டும்!

யேசுநாதரின் போதனைகள் ஏதோ ஒரு வழியில் வீடுகளுக்குச் சென்று கொண்டிருக்கிறது. ஆனால் இந்திய ரிஷிகள், மகான்கள், அவதாரங்களின் அரிய போதனைகள் இன்று ஆச்சிரமங்களிலும் நூல் நிலையங்களிலும் மேடை ஒலிவாங்கிகளிலும் மட்டுப்படுத்தப்பட்டிருப்பது போல் இருப்பது மிகவும் வேதனைக்குரியது.

எமது அரிய போதனைகள் வீடு வீடாகச் செல்ல வேண்டும், மக்களை விழிப்படையச் செய்ய வேண்டும்.

இன்று கனடா நாட்டில் முன்னூறு வரையிலான தமிழ்ப் பிள்ளைகளை அம்மா அப்பா குரு மூவரும் முதல் தெய்வம் என்பதை அறியவைத்த பெற்றோரையும் குருவையும் வணங்க வைத்தும் நல்ல பழக்கங்களான அறநெறிகளைச் செயல்படப் பழக்கும் வேதாந்த ஞான மன்றத்தின் செயல்பாடுகளையும் மன்றக் குருமார்களையும் மனதாரப் பாராட்டுபவர்கள் எம்மில் எத்தனைபேர்? யார் நல்லதை அறிந்து செயல்படுகிறார்களோ, நல்ல காரியங்களுக்கு ஊக்கம் கொடுக்கிறார்களோ அவர்கள் தூயமனம் கொண்டவர்கள். தூயமனம் கொண்டவர்கள் உண்மையிலே பாக்கியசாலிகள். ஏனெனில் அவர்களால்தான் இறைவனை உணரமுடியும். அறநெறி எனப்படும் ஒழுக்கம் சொல்லோடு நிற்காமல் செயல்பாட்டில் வெளிப்பட வேண்டும். இதுவே உண்மையான இறை வழிபாடு. இன்று நமக்கு வேண்டியதெல்லாம் அறம் ஆகிய ஒழுக்க நெறியின் செயல்பாடே! தூயமனம் கொண்டவர்களே! நீங்கள் சொல்லெறிக்கும் கல்லெறிக்கும் கலங்காமல் சமூக நலனுக்கும் உங்கள் ஆன்ம ஈடேற்றத்துக்கும் நலம் தந்து பலன் தரும் செயல்பாட்டுக்கு தயாராக வேண்டாமா? இறைவன் ஒவ்வொருவரிலும் அன்பு செலுத்துவது சேவையில் மிகச் சிறந்த திருத்தொண்டாகும். அறியாமை நீங்கினால் நல்ல செயல்பாடு நிச்சயம் உருவாகும்.

*




# MARKANDAN & CO

## SOLICITORS

***Empowered to Administer Oaths***

Legal Aid

**THAMIL HOUSE**
**720 ROMFORD ROAD**
**MANOR PARK**
**LONDON E12 6BT**

## M. MARKANDAN LLB

* All aspects of immigration matters from appeals to European court of human rights
* All types of conveyancing* Litigation * All courts civil/criminal
* Landlords/Tenant matters * Matrimonial * Police station advice
* All D.S.S and housing benefit matters
*Free advice for 15 minutes on the first attendance

**LEGAL AID**

**TEL : 0181 514 8188 FAX : 0181 514 8303**

# அர்த்த நாரீசுவர தத்துவம்



டாக்டர்.திரு.செந்தில்வேள்

பெண் விடுதலை எனப் பொங்கி யெழும் பேரெழுச்சியைப் பரவ லாகப் பல நாடுகளிலும் பார்க்கிறோம் இன்று.

மேனாடாம் கனடாவில் உலகச் சைவ மாநாடு நடக்கின்ற இந்தச் சமயத்தில் ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானம் என்கின்ற கொள்கை எமது சமயத்தில், சமயம் உண்டான சமயத்திலேயே உண்டென்பதை இப் பேரவை யிலே சிந்திக்கச் சரியான சமயம் தந்த சான்றோர்க்கு நன்றி.
ஆண்களோ பெண்களோ ஒருவருக்கொருவர் குறைந் தவர்கள் அல்லர். மதிப்பிலே மங்கை யருக்கும் சரி பங்கு உண்டு என்பதை உணர்த்த மங்கையைப் பாகங் கொண்டு மாதொருபாகன் என்னும் பேரும் கொண்டான் ஆண்டவன்.

## ஆதி பகவன் முதற்றே உலகு

உலகின் பொதுமறை என்று போற்றப்படும் அளவிற்கு ஏற்றமிகு செய்திகள் எல்லாம் உலகெலாம் ஏற்கும்படி தந்த திருவள்ளுவர், திருக்குறளின் முதல் பாடலிலேயே ஆதிபகவன் முதற்றே உலகு என்றார். முழு முதற் கடவுளைப் பகவன் என்று தனியே சொல்லாமல் அம்மை அப்பனாகவே கண்டு "அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு" என்று திருக்குறளின் முதல் அதிகா ரத்தின் முதற் பாடலைத் தொடங்கிய பெருஞ் செய்தியை இங்கே தொட்டுக் காட்டுகிறேன்.
எழுத்துக்களுக்கெல்லாம் அகரம் முதலாய் இருப்பது போல் உலகத்துக்கெல்லாம் கடவுள் முதலாய் இருக்கிறார் என்றே இதுவரை இக்குறளுக்குப் பொருள் சொன்னார்கள்.

தெய்வப் புலவர் திருவள்ளுவர் இப்பொருள் வைத்தா பாடினார். மனம் ஏனோ ஒப்ப மறுக்கிறது. கடுகையும் ஏன் அணுவைக் கூடத் துளைத்து ஏழு கடலையும் அதற்குள் புகுத்தி அடக்கும் ஆற்றல் உள்ளவர் அல்லவா வள்ளுவர். அதாவது, ஈரடிக் குறளுக்குள்ளே ஏழு கடலையும் மிஞ்சும் கருத்துப் பெருக்கு இருக்கும் என்பது தானே. அறிவதற்கு ஆவல் மிகுகிறது.

உமையும் சிவனும் இரண்டா, ஒன்றா? சக்தியும் சிவமும் வேறானாலும் இரண்டும் இணைந்த போது தான் உலகங்கள் உண்டாயின. இரண்டும் இணைந்திருக்கும் வரை தான் உலகங்கள் இயங்கும். பிரிந்தால் அண்ட பகிரண்ட மெல்லாம் அடங்கி ஒடுங்கும் பேரூழிக் காலம். ஆதியும் பகவனும் இணைந்த போது தான் உலகங்கள் உண்டாயின என்பதற்காகவே ஆதிபகவன் முதற்றே உலகு என்றார்.

இது எது போல என்றால் 'அ' எழுத்துக்களுக்கு முதலெழுத்து ஆனாலும் அது 'க்' என்னும் மெய்யெழுத்துடன் இணைந்த போது தானே மேலும் எழுத்து உண்டாயிற்று.

## அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு

சக்தி பெரிதா சிவம் பெரிதா என்ற சர்ச்சைக்கே இடமில்லை. இரண்டும் இணைந்து செயற்பட்டால் மட்டுமே அனைத்தும் இயங்கும். இதிலே ஆண் பெரிதா, பெண் பெரிதா என்ற சர்ச்சைக்கு இடமேது? சக்தி இன்றிச் சிவம் இயங்காது. சிவம் இன்றிச் சக்தி இயங்காது. ஆணும் பெண்ணும் மதிப்பிலே ஒருவருக்கொருவர் குறைந்தவரே அல்லர். ஆணுக்கும் பெண் ணுக்கும் சமூகத்திலே சம பங்கு உண்டு என்பதை உணர்த்துவது சைவ சமயம்.

## இறைசக்தியை இகழ்ந்து தன் சக்தி இழந்தமை.

பிருங்கி முனிவர் கதையிலே சிவனை மட்டுமே வலம் வருவேன். உமை சிவன் உடன் இருந்தாலும் உமையை மதியேன் என்று பிடிவாதம் பிடித்தா ரல்லவா! நடந்தது என்ன? அவரால் நடக்கக்கூட முடியாது போயிற்று. அனைத்துச் சீவராசிகளிலும் ஆதியும் பகவனும் ஆண் பக்கமும் பெண் பக்கமுமாக இணைந்திருப்பதா லேயே இயக்கம் என்பதை உணராத பிருங்கியின் இடப் பக்கத்திலிருந்து சக்தியம்சம் அகல்கின்றது. தளர்கிறார்; இயற்கை தானே! தவறை உணர்கின்றார்; திருத்துகிறார் தனது கொள்கையை! காலம் தாழ்த்திய ஞானம் என்பதனால் உதவிக்கு வருகிறது ஓர் ஊன்றுகோல். அதுவும் சக்தியின் கருணையால்!

## முந்தானை

சேலை அணிகின்ற போது பெண்கள் முந்தானையை அப்படியே அள்ளி எடுத்துத் தம் இடப் பக்கத்தோள் மேல் போர்த்துவார்கள். அது என்ன சில பெண்கள் இடப் பக்கம் போர்த்தினால் இதரப் பெண்கள் வலத்தோளில் போர்த்த வேண்டியதுதானே— அது ஏன். சொல்லி வைத்தாற் போல் அனைத்துப் பெண்களும் இடப் பக்கமாகவே போர்த்தும் வழக்கத்தை வைத்துக் கொள்ள வேண்டும்? வலங் காட்டி இடம் மறைத்த மர்மம் என்ன? அங்கே தான் ஒரு பேருண்மை போர்த்தப்பட்டிருக்கின்றது.

ஆசாரம் காக்கும் குலப் பெண்கள் இடத்தோளை மட்டுமன்றி இடது காலைப் பாதம் வரை மூடி மறைத்துத் தமது வலப் பாதம் முழுவதும் தெரியும் படியாக வலக் காலின் மேல் சேலையைச் சற்றே உயர்த்திக் கட்டியிருப்பார்கள். பேருண்மை இங்கு சற்றே வெளிப்படுகிறது.

**மூக்குத்தி**

ஆரணங்குகளுக்கு அழகு சேர்க்கும் ஆபரணங்களுள் அற்புதமாக அமைவது மூக்குத்தி. பாரம்பரியம் பேணும் பெண்க ளெல்லாம் மூக்கின் இடப்பக்கமே மூக்குத்தி அணிவார்கள்.

**உத்தரீயம்**

ஆண்கள் உத்தரீயம் தரிக்கும் போது அதனை இடத்தோளில் மேலிருந்தே அணிவது பாரம் பரியம்.

உடை உடுத்துவது என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவானது அல்லவா. ஆணும் உடை உடுத்துவது தான். பெண்ணும் உடை உடுத்துவ துதான். ஆனால் அதில் இருபாலாருமே உடலின் இடப் பக்கத்தை மறைத்து உடுத்து கிறார்களே. காரணம் என்னவென்று எண்ணத் தோன்றுகிறதல்லவா.

ஆணோ பெண்ணோ அனைவரி டத்திலும் ஆண் பெண் குணாதிசயங்கள் உண்டு. உடலிலே கூட இருபாலாரிடமும் இருபாலுக்குரிய ஆண் பெண் அவயவ அடையாளங்களைக் காணலாம். பெண்களுக்குப் பெண் தன்மை தரும் மூல ரசாயனங்களை மூளை உற்பத்தி செய்யத் தூண்டுவது ஆண்களில் ஆண் தன்மை தரும் மூல ராசாயனங்கள் அதிகமாகச் சுரப்பதும் இயற்கை. பெண்களுக்குப் பெண்மை கூடியும், ஆண்களுக்கு ஆண்மை கூடியும் காணப்படுவது கண்கூடு. செயற்கையாக மாற்றங்கள் செய்யவும் இயலும். ஆயினும் இயற்கைக்கு மாறான மாற்றங்கள் இடும்பையே தரும்.

**சால்வையும் சேலை முந்தானையும்**

சக்தியும் சிவமும் இரண்டும் இரண்டறக் கலந்ததே ஆதிமூலம் என ஆதி முதலிலேயே அறியத் தந்தது சைவ சமயம். உமை இடப் பாகமாகவும் சிவம் வலப் பாகமாகவும் நாரீமணி ஈசுவரியும் பரமேசுவரனும் இணைந்து காட்டும் திருக்கோலமே அர்த்த நாரீசுவர திருமேனி.
பெண் பாகம் இடபாகம் என்பதாலேயே சக்தியின் பக்கத்தை மேலிருந்து கீழ் வரை மறைத்து உடுத்தும் வழக்கம் மரபானது.

ஆடைகள் அணிவதிலே மட்டுமா ஆபரணங்கள் அணிவதிலும் அர்த்தமுள்ள தத்துவங்கள் அநேகம்!

பெண் தம்முடலில் இடப் பாகத்தை இயன்ற வரை மறைத்துத் துணி அணியும் போது அங்கே பெண்மையின் பேரழகு ததும்புகிறது. பெண்களுக்கு மட்டுமே பிரத்தி யேகமான மூக்குத்தி யைப் பெண்கள் இடது மூக்கில் அணிந்திருக்கும் போது அவ்வணிகலன் பெண்ணழகுக்கே அழகு சேர்க்கிறது. இலட்சுமீகரம் அங்கே பளிச்சிடுகின்றது.

மாறாக இடது புறத்தை வெளிப் படுத்தி வலது புறத் தோளில் முந்தானை அணிவதும் மூக்கின் வலது பக்கமாக மூக்குத்தி அணிவதும் பெண்மைக்கு மங்கலம் தராது. மாறாகப் பெண்மை மங்கவும், அவர்களின் ஆண் குணா திசயங்கள் ஓங்கவும் வழி செய்யும்.

ஆண்களானாலும் இடது தோளில் இட வேண்டிச் சால்வையை இடம் மாறி வலம் போட்டால் அது அவர்களது ஆண்மை மங்கவும், அவர்களில் பெண் குணாதிசயங்கள் ஓங்கவும் வழி செய்யும்.

**தனித்தனியே பெயர்பெறும் ஆண் பெண் அணிகலன்கள்**

துணிகளிலே? பெண்கள் அணியும் துணி சேலை என்றும், ஆண்கள் அணிவது வேட்டி சால்வை என்றும் பெயர் பெறுமாற் போல் ஆபர ணங்களும் வெவ்வேறு பெயர் கள் பெறுவன.

பெண் பூ ஆரம் சூடினால் அது மாலை எனப் பெயர் பெறும். ஆண் சூடும் பூ ஆரம் தார் எனச் சிறப்புறும்.

திருவெம்பாவை பாடும் பாவையர் அமுதனைப் பாடும் போது சூழகொன்றைத் தார் பாடி என்பார். பாடுந் தோறும் அமுதூறும் திருவாசகத்தில் தித்திக்கும் ஓர் பாடல்.

> கார்தார் குழை ஆடப் பைப்பூண் கலன் ஆடக்
> கோதை குழல் ஆட வண்டின் குழாம் ஆடச்
> சீதப் புனல் ஆடிச் சிற்றம்பலம் பாடி
> வேதப் பொருள் பாடி அப்பொருளாமாபாடிச்
> சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத்தார் பாடி
> ஆதி திறம்பாடி அந்தமா மாபாடி
> பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைத்தன்
> பாதம்திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்.

ஆண்கள் காலிலே அணிவது வீரக் கழல். பெண்கள் பெருமையுடன் அணிவது காற் சிலம்பு. கோணமாமலைப் பதிகத்தை அக்கரையில் இருந்து பாடிய போது சம்பந்தருக்கு ஆழி அலை ஓசையும் கேட்கிறது. கழல் அரவமும் கேட்கிறது. கூடவே காற்சிலம்பு அலம்பும் ஓசையும் கேட்கிறது. மாதுமையாளைப் பாகமாய்ப் புணர்ந்த வடிவினர் கோணமாமலையார், வலது காலில் கழல் பூண்டிருக்கிறார்.

இடது காலில் சிலம்பு ஊழல்

நிரைகழல் அரவஞ் சிலம்பொழி யலம்பும்
நிமலர் நீறணி திருமேனி
வரைகெழு மகளோர் பாகமாய்ப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பரும் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலங் கொழிக்கும்
கோணமாமலை யமர்ந்தாரே.

அணிந்திருக்கிறார்.

உழலும் வினை போக வேண்டுமா. வாருங்கள் இடை மருதூருக்கு. மருதூர் மேவிய பெருமான் மகாலிங்கேசுவரர் எனப் பெயர் பொலிபவர். அது என்ன அத்தனை கோயில் இருக்க மருதீசர் மட்டும் மகா லிங்கேசுவரர் எனப்பட வேண்டும். தில்லை அம்பலம் பேரம்பலம் தான். அப்படி யானால் மருதீசரை ஏன் மகாலிங்க ஈசுவரர் என்று சொல்ல வேண்டும். தில்லையிலே அது நர்த்தன சாலை அன்றோ. நர்த்தன மண்டபம் தில்லை என்றால் தில்லைக்குரிய மூலவர் இடை மருதூரின் மகாலிங்கர். விண்ணிலே இருந்த வண்ணம் பார்த்தால் சிதம்பரத்தையும் இடைமருதூரையும் ஒரே கோயிலாக இணைத்துக் காட்டும் ஒரு பெரிய ஆலய அமைப்பு வண்ணம் அழகுறத் தெரியும்.

**'இடைமருதில் சீராந்த கோயிலே கோயிலாகச் சேர்ந்தார்'** என்றும் **'இடைமருதில் பொருந்திய கோயிலே கோயிலாகப் பொலிந்தார்'** என்றும்

அழுத்தமாக இடைமருதுக் கோயிலே கோயிலென்றும் ஐயமறச் சொல்வதை அவதானிக்க வேண்டுகிறேன்.

மண்ணின் மொழி சொல்லி விண்ணைத் தமதாக்கிய தமிழ்ஞான சம்பந்தர் இடை மருதூர் இறைவன் மீது பாடிய ஈரடிக் குறளில்,

சுழலுஞ் சிலம்பார்க்கும் எழிலார் மருதரைத்
தொழவே பேணுவார்க் குழலும் வினை போமே

என்று சிவபாக வலக் காலில் இயற்றும் ஓசையும், சக்திபாக இடக்காலில் சிலம்பு ஆர்க்கும் ஓசையும் கேட்கும் திறம் பாடுகிறார்.

சிவன் உமைக்குச் சரிபாகந் தந்தான். சரிபாகந் தந்தான் என்று சொல்லுகிறோமே, கண்டவர் யார்?

மங்கையைப் பாகங் கொண்டான் மாதொருபாகன் என்று பேருங் கொண்டான் ஆண்டவன் என்று சொல்கிறோமே,விண்டவர் யார்? மூவரும் தேவரும் கண்டறிய அரிய எம் பிரானை நேரிற் கண்டு எண்ணுதற்கரிய பெருந்தொகைத் தேவாரங்களைப் பாடிய திருஞான சம்பந்தர் தான் பாடிய தற் பாட்டைத் தோடுடைய செவியன் என்று தொடங்கியது சிந்திக்க வைக் கின்றது.

சீர்காழித் திருக்குளத்தின் படிக்கட்டில் மூன்று வயதுக் குழந்தையை இருத்திவிட்டு நீரில் இறங்குகின்றார் சிவபாதவிருதயர், ரிக் வேகத்தில் அகமர்ஷணம் என்றொரு சூக்தம் வருகிறது அல்லவா. ரிக் வேதத்தில் பத்தாவது மண்டலத்தில் நூற்றுத் தொண்ணூறாவது சூக்தம். இந்தச் சுலோகத்தை மூன்று தரம் செப்பி மூச்சடக்கி நீரில் மூழ்கி இருக்கின்ற வேளை தந்தையைக் காணாது தவிக்கின்றது பிள்ளை. அப்பா அப்பா என்று கதறியது. நீரினுள் மூழ்கி இருக்கும் அப்பாவுக்கு அது கேட்கவில்லை. வேறொருவரும் வரவும் இல்லை.

கண்ணீர் தாரை தாரையாகச் சொரிய, எந்த அம்மை அப்பனைக் காண ஆலயம் வந்ததோ அக்கோயில் விமானத்தைப் பார்த்தபடி அம்மே அப்பா என்று ஏங்கி அழுதது. அம்மே அப்பா என்று வாயார அழைத்தால் வாராதிருப்பாரோ, உலக மாதாவாகிய உமையன் னையே முன் வந்து தன் பொங்கு கொங்கையில் சுரக்கின்ற பாலினைப் பொற்கிண்ணத்தில் ஏந்தி ஆளுடையப் பிள்ளை யாருக்கு அருந்தக் கொடுத்து அன்பு காட்டி மறைந்து இடபாரூடராக இறைபாகராகக் காட்சி கொடுக்கிறார். எம் பெருமான் கதை கேட்ட அப்பனுக்கு, அப்பனை வர்ணிக்கின்ற அழகைப் பாருங்கள். உலக அப்பனுக்கு உலகத்துக்கே அப்பனை அடையாளம் காட்டுகின்றார் அழகு தமிழில் ஞானப்பால் உண்ட திருவாயால்.

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடி
காடுடைய சுடலைப் பொடிபூசி என்னுள்ளங் கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முன்னைநாள் பணிந்து ஏத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவனன்றே

அப்பா, அப்பா, அதோ விடை ஏறி இருக்கிறாரே, சுடலைச் சாம்பலைப் பூசி இருக்கிறார் அல்லவா. என் உள்ளம் கவர்ந்த கள்வன் இவனே என்று சொல்லி வந்தவர் அதற்கு முதலிலேயே தோடுடைய செவியன் என்றாரே, தோடு என்பது பெண்கள் மட்டுமே அணியும் காதணி அல்லவா. ஆண்கள் கடுக்கனோ குண்டலமோ அணிவது தானே வழக்கம். வழக்கம் என்பதால் கடுக்கனோ குண்டலமோ அணிந்திருந்தால் அதைச் சுட்டிக் காட்டவோ, அடையா ளமாகவோ சொல்ல வேண்டிய தில்லை. உலக வழக்கத்திற்கு மாறாக ஒருகாதில் குண்டலமும் மறுகாதில் தோடும் அணிந்திருந்த காரணத்தால் தான் தோடுடைய செவியன் என்றார்.

அம்மையின் பாகத்தில் தோடு அணிந்திருந்த தன்மையைக் கண்டவர் ஞானசம்பந்தர்.

திருநீறு கொண்டு தென்னவன் நோய் தீர்த்த திருஞான சம்பந்தர் திருவாலவாய் மேவிய சிவனை உமைபங்கன் என்றே

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமைபங்கன்
திரு ஆலவாயான் திருநீறே.

பாடுகின்றார்.
திருநீற்றின் ஒளி விளங்க திருஞானசம்பந்தர் திருஆலவாய் வந்த காலம் புறச்சமய இருள் சூழ்ந்த காலம். ஒரு சைவனைக் கண்டாலே தீட்டு என்றிருந்த கூன்பாண்டியன் காலம். மகாராணி மங்கையர்க்கரசியாரும் அமைச்சர் குலச்சிறையாரும் மதுரைக்கு வர அழைப்பு விடுக்கிறார்கள். இடையூறு செய்வார் சமணர் என்று ஞானக் கண்ணால் கண்ட நாவுக்கரசர் கவனம் என்கிறார். இறைவன் என் உள்ளம் புகுந்த அதனால் வருகின்ற ஊறு விலகிவிடும். இடையூறு சிரமம் தர இராது. எல்லாம் நல்லதாகவே நிறைவேறும் என்று சொல்ல வந்தவர் — அந்தச் சந்தர்ப்பத்திலும் விடமுண்ட கண்டனை வேயுறு தோளி பங்கன் என்றல்லவா

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம்பிரண்டுமுடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே.

ஏத்துகின்றார்.
சென்ற தலங்கள் தோறும் தலைவனைத் தவறாது தரிசித்த ஞானசம்பந்தர் பாடுந்தோறும் மாதொருபாகங் கொண்ட செய்தியைத் தவறாது சொல்லும் பாங்கினைப் பாரீர்.

ஒருமுறை நாடி வந்தாலே உடனே திருமணம் கைகூடும் திருப்பதியே திருமணஞ்சேரி. மென் மொழியாள் ஒரு கூறாகி மயிலாரும் மல்கிய சோலை பயில்வானைப் பற்றி நின்றார்க் கில்லை பாவமே என்று நிச்சயமாக வாக்களிக்கின்றார். பிரமசுத்தி பாவத்தையே போக்க வல்ல திருஇடைமருதூர் திருத்தலம் மேவிய பெம்மானை எரார்ந்த மேகலையாள் பாகங் கொண்டீர் என்கிறார்.

நீரார்ந்த பெருஞ்சைடயீர்
நெற்றித் திருக்கண் நிகழ்வித்தீர்
போரார்ந்த வெண்மழு
வொன்றுடையீர் பூதம் பாடலில்
ஏரார்ந்த மேகலையாள் பாகங்
கொண்டீர் இடைமருதில்
சீரார்ந்த கோயிலே கோயிலாகச்
சேர்ந்தீரே

கடவுளை நேரிற் கண்ட அனைவருமே மங்கை பாகமாயிருக்கும் செய்தியைக் குறிப்படுவதைக் காண்பீர்.

நரியைப் பரியாக்கிப் பின் பரியை நரியாக்கிய பரமனின் திரு விளையாட்டால் தென்னவன் சீற்றத்துக்கு ஆளாகின்றார் மாணிக்கவாசகர். மீண்டும் விளையாட்டா. வைகை பெருகத் தன் பங்குக் கரை அடைக்க வகை தெரியாதிருந்த செம்மனச் செல்வியிடம் கூலிக்குப் பிட்டு வாங்கிச் சாப்பிட்டும் கரை கட்டாது விளையாடிப் பாண்டியனால் பிரம்படி பட்ட போது அது அனைத்து சீவராசி களுக்கும் வலிக்க மாணிக்கவாசகரின் வலிய பக்தியை வையகம் அறிகின்றது.

இக்கதையைத் திரு வாதவூரர் பெண் சுமந்த பாகத்தான் என்று திரு

பண்சுமந்த பாடல் பரிசு படைத்தருளும்
பெண் சுமந்த பாகத்தான் பெம்மான் பெருந்துறையான்
விண் சுமந்த கீர்த்தி வியன் மண்டலத் தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண் சுமந்த கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுது ங்காண் அம்மானாய்

அம்மானை பாடுகிறார்.
இப்படியாகவே இறை வனைக் கண்டவர்கள் சக்தியும் சிவமும் சரிபாதி சங்கதியைச் சொன்னார்கள்.

நீந்துவன, ஊர்வன, நடப்பன, பறப்பன ஆதிய சீவராசிகளிலே ஆண் பெண் என்று இருபால் இருப்பது போல் தாவரங்களிலும் இருபால் உண்டு. ஆண்பனை, பெண்பனை என்றுள்ளது அனைவரும் அறிந்ததே.

## வெற்றிலையில் இருபால்

வெற்றிலையில் கூட ஆண் வெற்றிலை பெண் வெற்றிலை என்றுண்டு. ஆண் தெய்வ மூர்த்தத்திற்குப் படைப்பது ஆண் வெற்றிலையாக இருத்தல் அவசியம். பெண் தெய்வ மூர்த்தத்திற்கு படைக்கும் வெற்றிலை பெண் வெற்றி லையாக இருக்க வேண்டியது முக்கியம்.

## கல்லில் இருபால்

அசையும் சீவராசிகளிலும் தாவரங்களிலும் ஆண், பெண் என்று பாகுபாடு உண்டு. அசையாத கல்லிலும் ஆண் பெண் உண்டு. ஆண் மூர்த்தமாக ஆண்டவனுக்குச் சிலை செய்யும் சிற்பி ஆண் கல்லிலே தான் சிலை பொழிய வேண்டும். பெண் சிலைக்கு பெண் கல்லையே தேர்ந்தெடுக்க வேண்டும்.

அப்படியானால் சிவலிங்கத் திருமேனி செய்வது எங்ஙனமோ? இலிங்கத்தை ஆண் கல்லிலும் ஆவுடையாரைப் பெண் கல்லிலும் செய்வது மரபு. இப்படி நுணுக்கமாகச் சிற்பக்கலை பிசகாது செய்தால் இறையருள் தங்கும்.

சிவலிங்கத் திரு மேனி செய்வார் ஆவுடையாரைப் பெண் கல்லிலும் இலிங்கத்தை ஆண் கல்லிலும் பொழிந்து ஒன்று சேர்க்கலாம் என்றார் அர்த்த நாரீசுவரர் சிலை பொழிய எந்தக் கல்லை எங்கே எடுப்பதாம்.

ஆண்கல்லும் பெண்கல்லும் இயற்கையாகவே இணைந்து இருக்கும் மலையின் பகுதி

பார்த்துத் தெளிந்து பிரமாணம் பிசகாது சிவபாகம் சக்தி பாகம் இரண்டும், ஆண்கல் பகுதியாலும் பெண்கல் பகுதியாலும் சரிபாதியாய் அமையப் பொழிந்திட்டால் அதுவே அருள் பொங்கும் அர்த்தநாரீசுவரர் சிலையாகும்.

சிற்பங்கள் செய்யும் ஓர் தமிழகக் கடற்கரை ஊருக்குச் சென்ற சமயம், விநாயகர் சிலை ஒன்று அவசரமாக வேண்டித் தர வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார் ஓர் பாடசாலை அதிபர்.
சிற்பங்களுக்குப் பேர் போன அந்த ஊரின் சாலைகளில் எல்லாம் சிற்பச் சாலைகள், விற்பனைக்கு வைத்திருக்கும் கணக்கற்ற சிலைகள். சரி, ஒரு சிலை வாங்கலாமே என்று அருகே சென்று பார்த்தோம். கண் காது தும்பிக்கை எல்லாம் அழகாகச் செய்திருந்தார்கள். சற்றுக் குனிந்து பக்கத்தால் தும்பிக்கையின் அடியே பார்த்தால் பிள்ளையாருக்கு வாயே வைக்கவில்லை. அப்படியானால் பிள்ளை யாருக்கும் எப்படி நைவேத்தியம் கொடுப்பதாம். தும்பிக்கைக்கு மறைந்திருக்கும் பகுதி தானே. யாரும் பார்க்க மாட்டார்கள் என்ற தைரியமா? அந்த ஒரு சிலை தான் அப்படி என்றால் அந்த ஊரில் பார்த்த அனைத்துச் சிலைகளையும் அப்படியே செய்திருந்தார்கள். அரச கலைக் கல்லூரியிலும் பார்த்தோம். அங்கும் அப்படித் தான். குறுகிய காலத்தில் கூடுதல் சிலைசெய்து சம்பாதிக்க என்று இப்படிச் செய்கிறார்கள் என்பதை அறிந்தோம். இனிமேல் இலட்சணம் பார்த்துச் சிலை வடியுங்கள் என்று இரங்கிச் சொல்ல வேண்டியிருந்தது.

இப்படியான கால சந்தர்ப்பத்தில் ஆண் சிலைக்கு ஆண் கல்லும், பெண் சிலைக்குப் பெண் கல்லும் தேடிப் பொழியுங்கள் என்று யாரிடம் சொல்வது. இதுவே இப்படியானால் அர்த்த நாரீசுவரர் சிலை செய்ய ஆண் கல்லும் பெண் கல்லும் இயற்கையாய் இணைந்திருக்கும் மலை பார்த்து இலக்கணமாய்ச் சிலை வடியுங்கள் என்று எடுத்துச் சொல்வது எங்ஙனமோ. கல்லில் கலை பிசகாது சிலை பொழியும் கலை உள்ளங்களைக் காண இறையருள் கூட்ட வேண்டும் என்று கேட்டு மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம் என்று கேட்ட வரத்தின் ஒரு பயனாய் மேனாடெல்லாம் பரவி சைவத்துறை விளங்க வாழ்கின்ற அனைவருக்கும் என் அன்பி னைத் தெரியக் காட்டி தமிழ் வாழச் சைவம் வாழ கனடாவில் மாநாடு கூட்டும் மாண்புமிகு மாந்தரை மகிழ் வோடு பாராட்டி

அர்த்த நாரீசுவரத் தத்துவப் பெரும் பொருளை ஆன்றோர்



நிறைந்த இப்பேரவையில் சற்றே சிந்திக்கும் வாய்ப்பினைத் தந்த சான்றோர் அனைவருக்கும் என் நன்றியையும் வணக்கத்தையும் அறியத் தந்து

விடையேறும் பெருமானின் பேரருளைப் போற்றி விடைபெறுகிறேன்.

**திருச்சிற்றம்பலம்**

## "தீரம்மிகு சூரன்போர்"

இலண்டன் அருள்மிகு சிறீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் இவ்வாண்டு நவம்பர் மாதம் 14ம் நாள் ஞாயிற்றுக்கிழமை சூரன்போர் சிறப்பாக நடைபெற உள்ளது. ஆலயத்தின் வாகனதரிப்புத் திறந்த வெளியில் இது இடம்பெறும். தீர்மான ஆரவார ஆட்ட லாவண்ணியங்களை அற்புதமாக இயக்கி புகழ்பெற்ற அணியில் போராட உள்ளனர். கந்தஷட்டி விரத தொடர் அபிடேக ஆராதனைகள் சூரன்போர் பாறணை திருக்கல்யாணம் என்பன சிறப்பாக இவ்வாண்டும் இடம்பெறும். விரதகாரருக்கு உகந்த முறையில் தீர்த்த பிரசாரம் வழங்கவும் ஏற்பாடுகள் உண்டு.

# GNANAM
## T E L E C O M




தொலைபேசி இணைப்புக்கள்
மலிவு விலையில் வேண்டுமா?

**நிறைவான சேவை!**
**விரைவான சேவை!**
**தெளிவான சேவை!**

இவற்றுக்காக எங்கும் நீங்கள் போகவேண்டாம்.
உடனே அணுகுங்கள் ஞானம் தொலைபேசி நிறுவனத்தை.

**இத்தனைக்கும் நீங்கள் அணுகவேண்டிய முகவரி**

*Gnanam*
**telecom centers**

**180 High Street North**
**East ham London**
**Tel: (+0044) 0181 47 08 84 4**
**Fax: (+0044) 0181 47 08 77 7**

| | |
|---|---|
| Australia | 5p |
| Canada | 5p |
| France | 5p |
| Germany | 5p |
| India | 25p |
| Italy | 7p |
| Malaysia | 14p |
| Pakistan | 29p |
| Singapore | 15p |
| Sri lanka | 27p |
| U.K | 3p |
| U.K mobile | 11p |

**ஞானம் நிறைந்தவர்களே ஞானத்தை நாடுங்கள்**

# வடமராட்சி தென்புலோலி முறாவில் விநாயகர் மஹா கும்பாபிஷேகம்



**"எங்கள் மண்ணில் எத்தனை ஆலயங்கள்?"**
என்ற தலையங்கத்தில் கலசம் இதழ் (1977 ஆடி, ஆவணி, புரட்டாதி, 1997 ஐப்பசி, கார்த்திகை, மார்கழி) தொடர்ச்சியாக ஈழத்தின் ஆலயங்களின் பெயர்கள் பிரசுரித்து அவ் ஆலயங்களின் தகவல்களையும் அறிய தரும்படி. விபரமறிந்தவர்களிடம் "செவ்வி" கேட்டிருந்தார் கலசம் ஆசிரியர். அந்த வகையில் வடமராட்சி தென்புலோலி முறாவில் விநாயகர் ஆலயம் பற்றிய தகவல்கள், கும்பாபிஷேகம் பற்றிய விவரணம்......

இயற்கை அன்னை இன்பம் களிக்க நடனம் புரியும் லங்காபுரியின் ஈழமணித் திருநாட்டின் சர்வ வளமும் நிறைந்த வடமராட்சி பதியே. வணிகர்களும், விவசாயிகளும், செறிந்து வாழும். புலோலிப் பதியினிலே. நெல் வயல்கள் பொலிந்து நிற்கும் வயற் பரப்பின் நடுமத்தியே. குளமும், தல விருட்சமும், முன் பின்னாய் சூழ எழிலோடு மிளிரும் ஆலயம்தான் முறாவில் விநாயகர் தேஸ்தானம். பல நூற்றாண்டாய் அவ்வூர் மக்களுக்குத் தாயினும் சாலப் பரிந்தருள் தரும் அற்புத விநாயகர் பன்னெடுங்காலமாய். விநாயகரும். மஹாமண்டபத்தில் எழுந்தருளி விநாயகர், சூலவைரவர், முஷிகம், பலிபீடம், என இருந்த ஆலயம் தற்போது நூதன பரிபார மூர்த்திகளாய் முருகன், வைரவர், ஆலயங்கள். தனித்தனியாக அழகாகக் கட்டப்பட்டு புதிய மணிக் கோபுரமும், மணியும் அமைந்தது. மிக அழகாய் ஆலயம் காட்சி தருகின்றது.

இவ்வாலயத்தில் கந்தபுராண படிப்பு, மற்றும் புதிர் பூஜை(நெல் அறுவடை செய்ததும் நடாத்தப்படும் பூஜை) விநாயக சதுர்த்தி என்பன மிகமிகச் சிறப்பாக நடைபெறும் பூஜைகளாகும். சரித்திர பிரசித்தி பெற்ற "வல்லிபுர ஆழ்வார்" ஆலயத்திற்குச் செல்லும் அடியார்கள் அனைவரும். இவ்விநாயகரின் தரிசனம் பெற்றே செல்வார்கள். அதற்கு அமைய வல்லிபுர ஆழ்வார் ஆலயத்திற்குச் செல்லும் வீதியினிலேயே. இவ்விநாயகர் ஆலயம் அமைந்துள்ளது. இத்தனை சிறப்புகள் கொண்ட இவ் ஆலயத்தின் பரி பாலனத்தினர் புலோலி வாழ் இளைஞர்களின் விடா முயற்சி. அடியார்களின் தாராள நிதியுதவி. திருத்தொண்டு, போன்ற செயற்பாடுகளின் சிறப்பால். தற்போதைய போர்ச் சூழலிலும் மிகமிகச் சிறப்பாக 06.09.1999. திங்கட்கிழமை ஆவணி மாதம் 20ம் நாள் புனர்பூச நட்சத்திரம், ஏகாதசிதிதி, சிங்கலக்னம், சேர்ந்த அதிகாலை பொழுது. சூரிய பகவான் பூமி நோக்கி திருக்கண் பார்வை பார்க்க வேத மந்திரங்கள்தெய்வ திரு உருவில் சானித்திய மெருகருள் கொடுக்க மங்கள வாத்தியம் மனங்களை நிறைக்க பக்தர்களின் அரோகரா ஒலி வானைப்பிளக்க. பிரணவ பொருளாய் விளங்கும் முன்னவனாம் மூத்த முறாவில் விநாயக பெருமானுக்கு துன்னாலை சாரதாபீட குருகுல சிவாசாரியார். "சிவாகம கிரியா தத்துவநிதி" சிவபிரம்மஸ்ரீ ராம் கெங்காதர குருக்கள் தலைமையில் குட முழுக்கு நன்னீராட்டு விழா பல சிவாசாரியார்கள் சூழ இனிதே நிறைவெய்தியது. இலண்டனிலும், ஐரோப்பிய ராஜ்யத்திலும் இடம் பெயர்ந்து வாழும் அவ்வூர் மக்கள் அனைவரும் மனக்கண்ணில் இக்கும்பாபிஷேகத்தை கண்டு திருவருள் பெறுக!

**துன்னையூர்**
**ராம் தேவலோகேஸ்வரக்குருக்கள்.**

# சித்திரதேர் திருப்பணி காணும் பன்றித் தலைச்சி அம்மன் கோவில்



ஈழத்தின் சரித்திர பிரசித்தி பெற்ற ஆலயங்களிலே தென்மராட்சி மட்டுவில் பதியில் பழமை வாய்ந்த அருட்பெரும் ஸ்தலமாக விளங்குவது பன்றித்தலைச்சி ஸ்ரீ கண்ணகை அம்மன் கோவில். அதிலும் பங்குனி திங்கள் தினமானால் இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் அடியார்கள் கூட்டம் படையெடுத்துச் செல்லும் அற்புத காட்சி கண் கொள்ளா காட்சியாகும். இதனால் இந்த பன்றிதலைச்சி எனும் இடத்திற்கு ஆதிகாலத்தில் "திங்கள் ஊர்" "சந்திர புரம்" என்ற நாமங்களும் உண்டு என்பது. ஆலய கல்வெட்டுகளின் கூற்று. இவ்வாலயத்தின் கருவறையில் ஸ்ரீ கண்ணகா பரமேஸ்வரியாகவும் (சபை) எழுந்தருளி மண்டபத்தில் சிவகாமி அம்பாள், ராஜராஜேஸ்வரி அம்பாள், சக்ரவாசினி அம்பாள் என முத்தேவிகளின் திருஉரு அற்புதக் காட்சியாகும்.

இங்கு வரும் பெரும்பாலான அடியார்களும் அம்பிகைக்குப் பொங்கலிட்டுத் தாமே படைத்து நிவேதித்து அடியார்களுக்கும் கொடுத்துச் செல்வது வழமை. அத்தோடு இங்குள்ள தீர்த்தக் குளத்தில் நீராடி சலக வியாதிகளும் நீக்கி செல்வதும் குறிப்பிடத்தக்கதொன்றாகும். இத்தனை சிறப்புகள் நிறைந்த இவ்வாலயத்தின் பெருமைக்கு நிகர் சேர்க்கும் வகையில் நடைபெறும் "சித்திரத்தேர்" திருப்பணி குறிப்பிட்டாக வேண்டியது. சுமார் 36 அடி உயரம் கொண்ட கணக்கில் உருவாக்கப்படும் இந்தச் சித்திரதேரின் திருப்பணி அம்பிகை இருப்பிடமான பீடம் வரை நிறைவுற்று சென்ற ஆண்டு உற்சவத்தில் மேற்புறம் கட்டுதேர் பாணியில் அமைத்து வெள்ளோட்ட ரதோற்சவங்கள் நிறைவாகின. தற்போது அமைத்து வெள்ளோட்ட ரதோற்சவங்கள் நிறைவாகின. தற்போது மீண்டும் முழுமையான திருப்பணிகள் நடைபெற்று வருகின்றது. அம்பிகையின் 18 புராண இதிகாச சரிதங்கள் எல்லாம் மிக அழகாய் சித்திர வேலைப்பாடுகளுடன் பொறிக்கப்பட இருக்கின்றது. அத்தோடு தேரை நிறுத்தும் பிரமாண்ட மண்டப படிக்கல் வேலைகளும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. தற்போது உள்ள இடர்பாடு நிலைகளும் பல அடியார்களின் வசிப்பிடமின்மையும், திருப்பணிகளுக்கு பொருளாதாரக் குறைவும், சிறு சிறு தாமத நிலைகள் ஏற்படினும், ஆலயத்தின் பரம்பரை தர்மகர்த்தாவான திரு சி.சிவகுரு அவர்களின் அயரா முயற்சியானது சிறப்பான முறையிலே திருப்பணிகள் நித்திய நைமித்திய பூஜைகள், ஒழுங்காக நடைபெற வழி வகுக்கின்றன தற்பொழுதுகூட ஆறுகால பூஜைகள், மற்றும் உற்சவங்கள் சிறப்பாக நடை பெறுகின்றன. ஆலய நித்திய பூஜைகள் சரசாலை சிவஸ்ரீ ந.மகேஸ்வர குருக்கள், பிரம்மஸ்ரீ ந.லோகநாத சர்மா ஆகியோர் சிறப்பாகச் செய்கின்றனர். உற்சவகால கிரியைகள் ஆலயத்தின் பரம்பரை உற்சவகுரு. ஊரெழு. சிவபிரம்மஸ்ரீ வைத்தியநாத சிவாசாரியார் புதல்வர்கள் நடாத்தி வருகின்றனர். சரித்திரப் பிரசித்தி பெற்ற இவ்வாலய விபரங்கள் அனைத்தும் இடம்பெயர் வாழ் மக்கள் அறியும் வண்ணம் சைவமுன்னேற்ற சங்கத்தின் "சைவப்பணி புரியும்" காலாண்டு இதழ் "கலசம்" மூலம் தெரிவிப்பதில் மகிழ்வு கொண்டு பன்றித்தலைச்சி அம்பாளின் திருப்பணிகள் பூரணமாய் நிறைவு கொள்ள கண்ணகா பரமேஸ்வரியைப் பணிவோமாக!

துன்னையூர்
ராம்.தேவலோகேஸ்வர குருக்கள்.

# பிரமன் மட்டுந்தானா, பொய்யன்? திருமாலும் பொய் சொன்னாரே!

மாணிக்கன் கணேசராசன் — சட்டமாணவன்



**"திருமாலும் பன்றியாய்ச் சென்று
ணராத் திருவடியை
உருநாமம் அறியவோர் அந்தண
னாய் ஆண்டு கொண்டான்
ஒருநாமம் ஒருவரும் ஒன்றுமில்லாக்
காயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேனம்
கொட்டாமோ"**

என்று பாடினார் மணிவாசகர் திருத்தெள்ளேனம் என்ற பாடற்றொகுதியில்

**"பூமேல் அயனெடு மாலும் புகலரிதென்று
ஏமாறிநிற்க அடியேன் இறுமாக்க
நாய்மேல் தவிசிட்டு நன்றாப் பொருட்படுத்த
தீமேனியானுக்கே சென்றுதாய் கோத்தும்பீ"**

என்று "திருக்கோத்தும்பி" என்ற பாடல் தொகுதியில் பாடி வைத்தார் அதே மாணிக்கர்.

**"பிரமன் மாலறியாத பெருமையான்
தருமம் ஆகிய தத்துவன் எம்பிரான்
பாமனார் உறை பாண்டிக் கொடுமுடி
கருமமாகத் தொழு மடநெஞ்சமே"**

என்று திருக்குறுந் தொகை பாடினார் நாவுக்கரசர்.

**"மாலொடு அயன் அறியாத
வண்ணமும் உள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள்
மெய்யது வெண்பொடி நீறு
ஏலவுடம் பிடர் தீர்க்கும்
இன்பம் தருவது நீறு**
ஆலமது உண்டமிடற்றுஎம்
ஆலவாயான் திருநீறே.

என்று ஞான சம்பந்தர் அடிமுடி தேடிய கதையைக் கூறினார்.

**"மாலோடு நான்முகனும் கேட வளர் எரியாய்
மேலோடு கீழ்காணா மேன்மையான் வேதங்கள்
நாலோடும் ஆறங்கம் நாலூர் மயானத் தெம்
பாலோடு நெய்யாடிப் பாதம் பணிவோமே"**

என்று திருநாவலூர் மயானப் பதிகத்தில் திருஞான சம்பந்தர் அடிமுடியும் தேடி அலைந்த பிரம்மன், விட்டுணு ஆகியோரின் கதையை மொழிந்தார்.

இவற்றிலிருந்து அடிமுடி தேடிய கதை, நாயன்மார் காலத்திலே வழக்கில் இருந்தது என்பது தெரிகின்றது.
இந்தக் கதையைப் பல முறை எனது அப்பா எனக்குப் பலமுறை கூறி வந்திருக்கின்றார். இந்தக் கதையின் விளைவாகப் பிரமனுக்கு ஏற்பட்ட அவலத்தையும் எடுத்துரைத்து வந்திருக்கிறார்.

நான் பெரிது நீ பெரிது என்று விஷ்ணுவும் பிரம்மாவும் ஆளுக்காள் போட்டி போட்டார்களாம். அதுவேளை முழு முதற் கடவுளாகிய சிவபெருமான் ஒளி வடிவாக ஓங்கி நின்று, விண்ணிறைந்தும் மண்ணிறைந்தும் மிக்காய் வியங்கொளியாய்க் காட்சி அளித்தானும் அடி முடியில்லாத இந்த ஒளிப் பிழப்பின் அடியையோ முடியையோ காணவல்லரேல், நீங்கள் தான் உலக முழுமுதல் என்று ஏற்றுக் கொள்வேன்" என்று ஆதியந்தமில்லா அருட் பெருஞ் சோதியான சிவ பெருமான் கூறினாராம். சிவனின் கூற்றைப் பிரம்மனோ விட்டுணுவோ ஏற்கவில்லையாம். இதோ ஒளிப்பிழம்பின் முடியைக் கண்டு வந்து விடுகிறேன்" என்று கூறிய விட்டுணு பன்றியாய் உருமாறி நிலத்தைக் கிழித்துக் கொண்டு புறப்பட்டாராம்.



பல்லூழிகளாகப் பறந்த அன்னப் பறவை பிழம்பின் மேலெல்லையைக் காண முடியாமல் களைத்துப் போய்த் திரும்பிக் கீழே வருகின்ற வேளையில் சிவப் பிழம்பில் இருந்து வீழ்ந்த தாழம் பூவொன்றை அன்னப்புள் கண்டதாம். எங்கிருந்து வருகிறாய் என்று பூவைக் கேட்டபோது, அந்தப்பூ "சிவபெருமானின் முடியில் இருந்து வீழ்ந்து கீழ் நோக்கி வந்து கொண்டிருக்கிறேன்" என்று கூறியதாம். இதைக் கேட்ட அன்னப்புள், அந்தப் பூவைத் தனக்கு உதவுமாறு

கேட்டதாம். அதாவது அந்த அன்னப்புள் ஒளிப்பிழம்பின் முடியான சிவன் தலையைக் கண்டதாகவும், சிவமுடியிலிருந்து தானும் அந்த அன்னப்புள்ளும் பூமி நோக்கிப் பயணித்ததாகவும் பொய்ச் சாட்சி கூறும்படி அன்னப்புள் அந்தப் பூவைக் கேட்டதாம். பூவும் இணங்கிற்றாம். பூமியில் இறங்கியதும், "முடி கண்டாயா" என்று சிவபெருமான் கேட்டபோது " ஓ, கண்டேனே கண்ணாரக் கண்டேனே" என்று பிரம்மன் பொய் சொன்னபோது, பூவும் "ஓம் ஓம்" என்று பொய்ச் சாட்சி கூறிற்றாம். பொய்ச் சாட்சி கூறிய குற்றத்துக்காகப் பிரமனைச் சிவன் சபித்தார் என்றும், உலகத்தார் உன்னை வணங்கக் கூடாததால் உனக்குக் கோவிலும் அமைக்கக்கூடாது என்றும் சிவன் சபித்தார் என்றும், அதனாற்றான் பிரம்மனுக்குக் கோவில் இல்லை என்றும் கதை கூறுகின்றது.

பன்றியாகப் போன விஷ்ணு அடியைக் காண முடியாமற் தோற்றுப் போய் மீண்டு வந்து, அடியைக் காண முடியவில்லை என்று உண்மையைச் சொன்னாராம். இதனால் சிவபெருமான் விஷ்ணுவைச் சபிக்கவில்லை என்றும் ஆகவேதான் அவருக்குக் கோவில் கட்டி வணங்குகின்றார்கள் என்றும் கதை கூறுகின்றது.

அப்பா கூறிய மேற்படி கதையில் எனக்கொரு சந்தேகம். அதாவது, பிரம்மா பொய் சொன்னார் என்றும், விஷ்ணு பொய் சொல்லவில்லை என்றும் அப்பா சொன்னது எனக்குச் சரியாகப் படவில்லை. எனது கருத்துப்படி, பிரம்மா மட்டுமல்ல விஷ்ணுவும் பொய்தான் சொன்னார். ஏனென்று கேட்கிறீர்களா?

இந்தப்பூமி, பந்து வடிவானது. வான்வெளியில் அந்தரத்தில் நிற்கின்றது. வான்வெளிக்கு எல்லை தெரியவில்லை. விஞ்ஞானிகளுக்கும் தெரிய வில்லை. ஆனால் பூமிக்கோ எல்லை உண்டு.

பிரம்மாவுக்கும் விஷ்ணுவுக்கும் இடையிலான உரையாடல் இந்தப் பூமியில் தான் நடந்ததாகக் கதைகள் கூறுகின்றன. அப்படியாயின், சிவன் மற்ற இருவர் முன்னும் ஒளிப்பி ழம்பாகத் தோன்றி நின்றார் என்றால், சிவன் பூமியில் தான் நின்றார் என்றே சொல்ல வேண்டும். அப்படியாயின் எந்த ஒளிப்பிழம்பு நிலத்துக்குள் எதுவரை நீண்டு சென்றது என்று கொள்வது? பூமியின் கீழ் எல்லை வரைக்குமா? அல்லது பூமிக்குக் கீழே உள்ள கீழ் வெளியின் எல்லை வரைக்குமா? விட்டுணு, பன்றியுரு வெடுத்து நிலத்தைக் கிழித்துக் கொண்டு கீழிறங்கிச் சென்றார் என்றால், அவர் பூமியின் கீழெல்லை வரையாதல் சென்றிருக்கலாம். அதற்கப்பால் இல்லை, அப்பால் பூமி (நிலம்) இல்லையாகையால் பன்றி அதற்கப்பால் செல்ல முடியாது.

சிவன் என்ற ஒளிப்பிழம்பு பூமிக்கப்பாலும் நீண்டு சென்றிருக்க வேண்டும். பூமிக்கடி வரைக்கும் பன்றி என்ற விஷ்ணு சென்றிருந்தால், பூமிக்கு க்கப்பாலும் ஒளிப்பிழம்பு ஓங்கிக் கீழிறங்கிச் சென்றது என்ற உண்மை புலப்பட்டிருக்கும். இதைப் பன்றியுருவான விஷ்ணு கூறியதாகக் கதை இல்லை. ஆகவே, முழு முயற்சி செய்யாமலே, ஒளிப்பிழம்பின் அடியைக் காணமுடியவில்லை என்று விஷ்ணு கூறியது உண்மையல்ல என்று தோன்றுகின்றது. உண்மை கூறாத பிரம்மனுக்கு வழங்கப்பட்ட தண்டனை அவ்வாறே உண்மை கூறாத சோம்பேறியான விஷ் ணுவுக்கு வழங்கப்படாததை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஏன் கேள்வி தப்பா?

புராணம் புரிந்த புலவோர்கள் எனது சஞ்சலத்தைப் போக்கி னால் நன்றி உடையவனாக இருப்பேன்.




## சைவ முன்னேற்றச் சங்கத்தின் அன்பு அறிவிப்பு

அன்புள்ள தமிழ் மக்களே!

இறந்த வீட்டுக் கிரியைகள் செய்வதற்காக இலங்கையிலிருந்து சைவக்குருக்கள் ஒருவரை வரவழைத்துள்ளோம். அவரோடு தொடர்பு கொள்ளவும், விபரங்களை அறியவும் பின்வரும் தொலைபேசி எண்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**0181 550 4233 / 0181 550 2739 / 01268 766624**

# சிறுவர் கலசம்


## வணக்கம்!

### பெற்றார்களே! சிறுவர்களே!

இந்த இதழ் எமது 27ஆவது இதழ். இம் முறை உங்களுடைய சிந்தனைகளைத் தூண்டக்கூடிய பல கட்டுரைகளை உமக்குத் தருகின்றோம். இவை தமிழிலும் ஆங்கிலத்திலும் உள்ளன. தமிழ்க் கட்டுரைகளைப் புரிந்து கொள்ளாவிடின் உங்கள் பெற்றாரை அணுகிக் கேளுங்கள். அல்லது எமக்கு எழுதுங்கள். நாங்கள் உங்களுக்கு உதவக் காத்திருக்கின்றோம். நீங்களும் எங்களுக்குக் கட்டுரைகள் அனுப்பவேண்டும். உங்கள் அபிப்பிராயங்களை எங்களுக்கு எழுதுங்கள். சிறுவர்களே மேலும் மேலும் எழுதுங்கள். தமிழில்தான் எழுதவேண்டுமென்ற கட்டாயமில்லை. ஆங்கிலத்திலும் எழுதுங்கள். நீங்கள் தமிழர்களாக வாழவேண்டுமென்பதுதான் எமது அவா.

– ஆசிரியர் –

## The Cat and The Parrots




A cat came to know that some parrots were unwell in their home. He dressed himself as a doctor and went to the residence of the parrots. He knocked at the door and said, "I learn that you are unwell. Please open the door. I shall give you medicine and cure you of your ailment.

The parrots knew the wicked intention of the cat. They said, "We are all well and happy. Thank you for your offer. If you do not make your appearance we will be quite satisfied.


Unsolicited offer of help has a motive behind it.

# கோயிலுக்குப் போவோம்.




அப்பா: சிவன் கோவில் மணி ஓசை கேட்கிறது. பூசைக்கு நேரமாகி விட்டது. எல்லோரும் குளித்து விட்டார்கள் தானே.
வாருங்கள் கோயிலுக்குப் போவோம்.

கமலா: அம்மா தட்டத்தில் தேங்காய், பழம், பாக்கு, வெற்றிலை, கற்பூரம் எல்லாம் எடுத்து வைத்துவிட்டார். இதோ வருகிறோம்.



அப்பா: கால்களைக் கழுவுங்கள்.

அம்மா: இந்தத் தேங்காயையும் கழுவு.
பழத்தை நான் கழுவுகிறேன்.



அப்பா: கோபுரத்தைப் பாருங்கள்.
தலைமேல் கை கூப்பிக்
கும்பிடுங்கள்.




The Ramayana literally means "The Wanderings of Rama" (Rama+Ayana). As a narrative it can be seen as a physical journey involving a fourteen year exile of hardships and privations, testing the moral fibre of the hero.

It can also be described as a spiritual journey, involving the evolution of humanity into divinity, "Maryada Purushottama Rama" becoming "Rama Avatara", the human being developing into the divine.

**Historically,** according to some scholars, it is the chronicle of the expansion of the Aryan dynasty of Ayodhya, across the southern territory of the Indian subcontinent.


**Mythologically,** it is a vivid presentation of the confrontation of the forces of good with the forces of evil, represented respectively by Prince Rama of Ayodhya against the rakshasa Lord of Lanka.

The Ramayana comprises seven Kandas or Cantos.


**Bala-kanda** (The Boyhood Canto) is the first one in which the royal Raghu lineage of Rama is traced along with the circumstances attending his birth, and some childhood events and episodes ending with his marriage with Sita, daughter of King Janaka of Videha.

**Ayodhya-kanda,** the second is the heart of the Ramayana. It describes various incidents centring around the royal households and concentrating on the court






intrigues—leading to Rama's exile to the forest. Rama, Sita and Lakshmana leave Ayodhya and set out to the forest. At Chitrakuta, Bharata meets Rama, prays for his return. Rama rejects his proposal and when pressed offers his sandals to Bharata who promises to place them on the throne and rule Rama's kingdon as his regent.



**Aranya-kanda** (The Forest Canto) is the third which details Rama's sojourn in the forest with Sita and his brother Lakshmana. In it is related his meeting with rishis and his overpowering of the anti-gods and other malignant powers who afflict the lives of the forest dwellers. It also describes the abduction of Sita by Ravana, in retaliation for the so-called insult by Lakshmana of Ravana's sister Shurpanakha.






Ravana fights Jaitiyu who comes to protect Sita.

Rama kills Bali.

Lakshmana lying wounded during the battle.

**Kishkinda-kanda,** the fourth canto, describes Rama's victory over Vali. He stays at Malyavan mountain without entering Kishkinda, now the capital of the monkey-lord, Sugriva.

**Sundar-kanda** (The Canto of Enchantment) is the fifth which delineates the passage of Hanuman to Lanka where he meets Sita. He returns with the news of Sita. Rama journeys to Lanka, across a bridge constructed by a host of *vanara* followers, to facilitate the conquest of Lanka. This canto is filled with exquisitely poetic shlokas describing the plight of imprisoned Sita, and the intensity of her love and devotion to her husband. It is a poignant canto of compassion, love, loyalty and pleasing adventure—and that is why it enchants.


**Yuddha-kanda** the sixth (The War Canto) is sometimes also called Lanka-kanda (since that is where the war was fought). It narrates the battle of Rama with the ten-headed Ravana, the death of Ravana, the recovery of Sita, the triumphant return to Ayodhya and the coronation of Rama. In this manner the stipulated period of fourteen years of exile of Rama is completed, and he emerges glorious. His message of spiritual evolution of mankind is thus communicated through literary narrative legends and symbols to the reader of the Ramayana.

**Uttara-kanda** is the final (the later section). In this the banishment of Sita by Rama is described. As the ideal king, Rama is constrained to put the voice of the people above his personal preference and affection for Sita.

Sita's twin sons, Lava and Kusha, are born in Valmiki's ashrama, where she takes shelter; Rama acknowledges his sons and is reunited with Sita. But Sita decides to leave Rama. She requests her mother Prithvi (the earth) to shelter her, and vanishes from Rama's life. Just as this is the story of Rama, it is the story of Sita, too. Valmiki underlines this fact in the words 'Sitayah caritam mahat' *i.e.* the great story of Sita.

The picture of the exemplary rule of Rama—the rule of righteousness, peace and prosperity, non-violence, freedom from want and disease—was such that the term 'Rama Rajya' became a consummation to be striven for—the establishment of the Kindgom of God on earth.

The bare outline of the main story gives no idea of the wealth of episodes and incidents in the epic. It is the salvaging of human personality and of fundamental values, debased by the demon King Ravana, that the sage Valmiki shows here through his characters. Dasharatha kept his word; Rama obeyed his father and was a loving and faithful husband. Lakshmana embodied service; Sita exemplified purest womanhood and Hanuman (Anjaneya) embodies total and absolute dedication.



# ரட்சை தருசிற்றடிகள்



அருணகிரிநாதர் முருகக் கடவுளின் அருட் கடாட்சம் பெற்றுச் சீவன் முத்தராக முருகப் பெருமானைப் பாடிப் பரவிப் பரகதி அடைந்தவர். பெண்ணாசையிற் தணியாத தாகங் கொண்டு காமுகனாகத்திரிந்த அருண கிரிநாதர், தாம் புரிந்த முன்னைத் தவப்பேற்றினால் திருவண்ணா மலையிலே குருவுருவந் தாங்கி வந்த முருகப் பெருமானால் தடுத்தாட் கொள்ளப்பட்டுப் 'பாடு' எனப் பணிக்கப் பாடுந் திறமை வாய்க்கப் பெற்றார்.

அருணகிரி நாதரின் தன்னிகரற்ற முருக பக்திக்கு அவர் பாடல்கள் சான்றாயமைவன. தாயுமான சுவாமிகள் "ஐயா அருணகிரி அப்பா உன்னைப்போல மெய்யாக ஒரு சொல் விளம்பினார் யார்?" எனச் சிறப்பித்துள்ளமை அவர் பாடல்களின் உயர்வைக் காட்டுவதாகும். அருணகிரிநாதர் முருகப்பெருமானின் மேற் பொழிந்த அருட்பாக்களுட் திருப்புகழ் என்ற முகுடத்துடன் போற்றப் பெறும் சந்தப் பாக்கள் தலைசிறந்தன. முருகப் பெருமான் மீது காதலாகிக் கசிந்துருகச் செய்வன. இனிய இசை நயத்தாற் கேட்போரைப் பிணிக்குந் தன்மையன. இசை சிந்தைக்கினிய செவிக்கினிய, வாய்க்கினிய பாடல்கள். வந்த இருவினைக்கு மாமருந்து. பிறவித்துன்பம் தீர்க்கும் பேரமிழ்து. முருகப் பெருமானை எம்மனக்கண் முன்னே நிறுத்தும் முத்தமிழ்த் திருமணி.

இவர் பாடிய பதினாறாயிரம் திருப்புகழ்ப் பாக்களில் இன்று நமக்குக் கிடைப்பன ஆயிரத்து முன்னூறு பாடல்களே. செம்மை சான்ற திருப்புகழ்ப்பாக்கள் இழுமென்ற ஓசை நயமும் பொருட் செறிவும், சொல் லின்பமும் வாய்ந்தன. பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாலனாகிய முருகப் பெருமானைப் பாடும் பணியே பணியாகக் கொண்டு வாழ்ந்தவர். முருக தலங்களையும், சிவ தலங்களில் முருகக் கடவுளையும், இலங்கையிலே கதிர்காமக் கந்தனையும், நல்லூர் கந்தவனக் கடவை, திருக்கோணமலை ஆகியவற்றில் அருளாட்சி செய்யும் ஆறுமுகப் பெருமா னையும் பக்திப் பரவச நிலையிற் பாடி ஏத்தியுள்ளார். அருண கிரிநாதர் தித்திக்கப் திக்கப் பாடிய பாடல்கள் சிலவற்றை இங்கு நோக்கலாம்.

அருணகிரிநாதர், வயலூர் முருகனைப் பாடிய நிகழ்ச்சியைச் சுவைபடக் கூறுகின்றார்.

"பக்கரை விசித்ரமணி
பொற்கலனை இட்டநடை
பட்சியெனும் உக்ர துரகமு நீபப்
பக்குவ மலர்த் தொடையும்
அக்குடு புக்கர்தொளை
பட்டுருவத் தொட்டருள்கை
வடிவேலும்
திக்கது மதிக்க வரு குக்குடமும்
ரட்சை தரு
சிற்றடியும் முற்றிய பன்னிரு
தோளும்
செப்பதியும் வைத்துயர்
திருப்புகழ் விருப்பமொடு
செப்பென எனக்கருள்கை
மறவேனோ?

எனப்பாடுகிறார்.

விசித்திரமான பல்வகை மணிகளால் இழைக்கப்பட்ட பொன்னாபரணங்கள் அணிசெய்யும் கம்பீர நடை, விசை பொருந்திய மயிற்பட்சி யாகிய குதிரை, தீபம் என அழகாகத் தொடுக்கப்பட்ட மலர்மாலை, கிரௌஞ்ச கிரியைத் துளைத்துப் பொடியாக்கும் வண்ணம் செலுத்தப்பட்ட கூரியவேல், எட்டுத்திசைகளும் மதிக்கும் வண்ணம் பவனிவரும் சேவற் கொடி, எம்மையெல்லாம் இரட்சித்துப் பாதுகாக்கின்ற சிறிய அழகிய பாதங்கள், பராக்கிரமம் மிக்க பன்னிரு தோள்கள், செய்பதியாகிய வயலூர் இவற்றையெல்லாம் வைத்து உயர்ந்த திருப்புகழை "விருப்பமோடு கூறு" என முருகக் கடவுள் தமக்கு அருளிச் செய்தமையை எப்படி மறக்க முடியும் என அருணகிரிநாதர் கேட்கின்றார்.

முருகப்பெருமான் வயலூரிலே அருணகிரி நாதருக்கு மேற் கண்டவாறு காட்சி கொடுத்து வயலூருக்திருப்புகழை விருப்ப மாகப் பாடு எனக்கேட்டதை மனம் உருகிக் கூறி நிற்கின்றார். அடுத்துவரும் எட்டு அடிகளால் வயலூர் விநாயகப் பெருமானை எத்திப் புகழ்ந்து பாடுகின்றார் இக்கு எனும் கரும்பு, அவரை வகை, நற்கனிகள், சக்கரை, பருப்பு, நெய், எள், பயறு, அவல், துவரை, இளநீர், வண்டெச்சில் எனும் தேன், அப்பவகை பச்சையரிசி, பிட்டு, வெள்ளரிப் பழம், இடித்துச் செய்யப்பட்ட சிற்றுண்டி, கடலை. கிழங்கு வகை ஆகிய உணவு வகைகளை, விக்கினங்களைப் போக்குவதில் சமர்த்தனும், வித்தகக் கொம்பி னை ஏந்தியவருமான விநாயக ருக்குச் சமர்ப்பித்து இவர் சிவபெருமானின் திருக்குமாரன் எனப் பாடலை நிறைவு செய்கின்றார்.

அருணகிரிநாதர் தனித்து முருகப் பெருமானைப் பாடுவ தோட மையாது விநாயகர், சிவபெருமான், உமாதேவியார்,

விஷ்ணு, இலக்குமி, பிரமா, சரஸ்வதி ஆகிய தெய்வங்களோடு சேர்த்துச் சார்த்துவகையிலும் திருப்புகழை இசைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

“திருமகளுலாவும் இடபுயமுராரி” என்று தொடக்கம் கதிர்காமத் தலத்தின் மீது பாடப்பட்ட திருப்புகழில், இலக்குமி, திருமால் ஆகியோருடைய மருமகன் என்றும், “அரபு பிறை வாரி விரவு சடை வேணி” அணிந்த சிவபெருமானுக்குக் குரு நாதனாக வடிவம் உரைத்தவர் என்றும் சார்த்து வகையில் ஏனைய தெய்வங்களைப் பாடியமையை அவதானிக்கலாம்.



“தாவடி யேறும் மயிலிரும்” என்ற கந்தரலங்காரப் பாடலில் முருகக் கடவுளுடைய பாதங்கள் பதிந்த இடங்கள் மூன்றினைக் குறிப்பிடுகின்றார் அருண கிரிநாதர். சூரபத்மன் சாகாவரம் பெற்றவன். அவன் இறக்க வில்லை. கடல் நடுவே மாமரமாக நின்ற சூரபத்மனை வேல் இரு கூறாக்கியபோது ஒரு கூறு மயிலாகவும், மறுகூறு சேவலா கவும் மாறின. மயிலை வாகனமாகக் கொண்டு அதன் மேல் தினமும் தாவியேறும்போது பாங்கள் மயில் மேற் படுகின்றன.

## சந்தனா நல்லலிங்கம்

சூரன் செய்த தவப் பயனை வியாக்காதிருக்க முடியாது. அடுத்துக் கூறப்படுவது தேவர் முடி, கிரீடம் அணியப் பெற்ற தலையானது முருகப் பெரு மானின் பாதங்களிற் படும் பியாகத் தேவர்கள் வீழ்ந்து வணங்குவதால் அவர்கள் முடியிற் பாதங்கள் படுகின்றன. மூன்றாவது கூறப்படுவது “என்பாவடி ஏட்டிலும் பட்ட தன்றோ” என்ற அடிகள். அருணகிரிநாதர் திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரனுபூதி வேல்விருத்தம், மயில் விருத்தம் ஆகியவற்றை எழுதி முடிக்க முடிக்க, முருகப்பெருமான் பாதங்களால் முத்திரை குத்திவிட்டுள்ளார். ஆகவே முருகக் கடவுளின் செந்தாமரைப் பாதங்கள் பதிந்த பாடல்கள் திருப்புகட் பாடல்கள் எனில் மிகையில்லை.

கந்தரலங்காரப் பாடலில் மற்றுமோரிடத்தில் “வேல்பட் டழிந்தது செந்தூர் வயற்பொழில் தேங்கடம்பின்
மால்பட் டழிந்தது பூங்கொடி யார்மனம் மாமயிலோன்
வேல்பட்டழிந்தது வேலையும் சூரனும் வெற்பும் அவன்
கால்பட்டழிந்தது இங்கு என் தலைமேல் அயன் கையெழுத்தே” என்று கூறுவதை நோக்கலாம்.

கயல்மீன்கள் உகழ்ந்த அழிந்த வயல், முருகனின் கடப்பமா லையில் மயங்கி அழிந்த மங்கையர் மனம், வேல்பட்டழிந்த சூரன், கிரெஞ்சமலை, அவனது கால் பட்டழிந்த தலையெழுத்து என்பது பாடலின் சுருக்கமான பொருள். விதிவதி என்று அதன் விலிமையை விதந்தோது கின்றோம். வள்ளுவர் பெருமானும் சிவிகையுள் இருப்பவனையும், அதனைச் சுமந்து செல்பவர்களையும் ஊழ்வினைக்கு உவமை காட்டுகின்றார். அயன் ஆகிய பிரமா எமக்குத் தலையில் எழுதிவிட்ட அழிக்க முடியாத எழுத்து சிலையெழுத்து. முருகக் கடவுளை அனுதினமும் அவரது பாதங்களில் வீழ்ந்து அருணகிரிநாதர் வணங்கியதால், அவருடைய தலை பாதங்களிற் பட்டுத் தலையெழுத்தே அழிந்து விட்டதென அருணகிரிநாதர் கூறுவது சிந்தனைக்குரியது. அழிக்க முடியாதென நாமெண் ணும் தலையெழுத்தையே மாற்றும் வல்லமை முருகக் கடவுளின் பாதங்களுக்குண்டு. மனம் வாக்கு, காயம் ஆகிய திரிகரண சுத்தியோடு வணங் குதல் வேண்டும்.

மிக ஆழ்ந்த சிந்தனையைத் தூண்டுவது மேலே குறிப்பிட்ட திருப்புகழில் “ரட்சை தருசிற்றடியும்” என்ற பாட லடிகள். எம்மையெல்லாம் காத்தருளும் தாமரைப் பாதங்கள். அடுத்து அருணகிரிநாதரின் தலையெழுத்து அப்பாதங்களால் மாற்றப்பட்டமை. இறுதியாக அப்பாதங்கள் அருணகிரிநாதரின் பாவடியேட்டிலும் பதிந்துள்ளன. ஆகவே முருகக் கடவுளுக்கு உவப்பான திருப்புகழில் ஒரு பாடலையாவது தினமும் கூறி இறை அன்பைப் பெற்று உய்வடைவோம்.

❋

# அறப்பணிகளில் ஆலயங்கள்

## ப.வை ஜெயபாலன்

பண்டைய காலம் தொண்டு ஆலயங்கள் அறச்சாலைகளாகவும் கலைகளின் காப்ப ரண்களாகவும் திகழ்ந்து வந்துள்ளன. தமிழ் மன்னர்கள் தம் ஆட்சியின் கீர்த்தியை பிரம்மாண்டமான முறையில் தாம் அமைத்த ஆலயங்களின் மூலமே வெளிப்படுத்தி வந்தார்கள். வானுயர்ந்து நிற்கும் கோபுர சிற்பங்கள் சைவத்தமிழின் புராண இதிகாச வரலாறுகளை புலப்படுத்தி நிற்கின்றன. ஆலய வசந்த மண்டபங்கள் ஆய கலைகள் அறுபத்தி நான்கினையும் நிலை நிறுத்தி வளர்க்கும் களங்களாக பரிமளித்தன. ஆலயங்களோடு அமைந்த அன்னதான மடங்கள், தண்ணீர்ப்பந்தல்கள் என்பன அற்றார் அளி பசி தீர்க்கும் அறப்பணிகளை ஆற்றி வந்தன. "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம், "கோபுரதரிசனம் கோடி புண்ணியம்," "அன்பே சிவம்" என்ற முதுமொழிகளும் உயிர்களிடத்தில் அன்பு வேண்டும். தெய்வம் உண்மை என்றுதான் உணர்தல் வேண்டும் என்றே உணர்த்தி நின்றன.

இடை நிலைப்பட்ட காலங்களிலம் ஈாச் சைவ ஆலயங்களும் இயன்றவரை இன்னெறிகளின் வழிநின்று செயற்பட்டு வந்தன. சைவ ஆலயங்களை நிலை குலையச் செய்வதும் கிறிஸ்தவ தேவாலயங்களை எழுப்புவதையுமே இலக்காக கொண்டு அன்னிய படை எடுப்புகள் இயங்கின. ஆயினும் மேன்மை கொள் சைவ நீதியின் ஆத்ம பலத்தால் அழிந்தவை நிமிர்ந்து மீண்டும் தொடங்கும் மிடுக்கு என அறப்பணிகள் தொடர்ந்தன.

அண்மைக்கால ஈழ விடுதலைப் போர் காரணமாக இராணுவ கெடுபிடிகளும் மக்கள் இடம் பெயர்வுகளும் ஆலயங்களையும் எம் ஈழ நாட்டில் அனாதரவாக்கிவிட்டன. இடம் பெயர் வாழ்விடங்களாக உள்ள வன்னிசார்ந்த புறநிலை பகுதி ஆலயங்கள் மக்கள் தொகை வசதிக்கு ஈடு கொடுக்கக்கூடிய வசதிகளை கொண்டவையல்ல. ஆயினும் புலம் பெயர் நாடுகளில் ஆலயங்களின் வளர்ச்சி அதிஉன்னதமானது. பிரித்தானிய சைவ ஆலயங்கள் கும்பாபிசேகங்களுடனும், வருடாந்த உற்சவங்களுடனும் புத்தெழில் பெறுகின்றன. இந்நாட்டவர்களின் சமய உணர்வு குன்றிய நிலையில் ஆதரவின்றிக் கைவிடப்படும் தேவாலயங்கள் சைவ ஆலயங்களாக மாறி நிற்கின்றன. காலத்தின் கோலங்கள், இந்நாட்டில் மக்கள் பங்களிப்புடன் மலர்ந்து வரும் ஆலயங்கள் பல்வேறு சமூக காரணங்களாலும் மக்கள் ஒருங்கிணையும் முக்கிய களங்களாக உள்ளன. இந் நிலையில் அறப்பணிகளையும் கலைப்பணிகளையும் மக்கள் சக்தி மூலம் முன்எடுக்கக் கூடிய வலுகொண்டதாக இங்கு ஆலயங்களே திகழ்கின்றன.

புலம்பெயர் வாழ்வில் இன்நாட்டு ஆலயங்கள் இருவேறு முக்கிய அறப்பணிகளை எதிர்நோக்குகின்றன. வேற்று நாட்டில் தம் தாய் மொழி சமய கல்விகளை பாடசாலையில் பெற வாய்ப்பற்ற தமிழ் சிறார்களுக்கு அவ் அறிவும் இயல் இசை நாடகம் என்னும் முக்கலைகளின் திறனும் பொருந்தச் செய்து சந்ததியாக தமிழும் சைவமும் கலைகளும் உலகெங்கும் தொடரும் வகை உழைத்தல் முதன்மையானது. இன்றய நிலையில் உணவு, உடை, உறைவிடம். சுகாதாரம், கல்வி. கலை வளர்ச்சிக்கு வாய்ப்புகள் வசதிகள் குன்றிய தாயக மக்களுக்கு இங்கிருந்து உதவுதல் அடுத்தது.

ஏற்கனவே இப்பணிகளை இங்குள்ள தமிழ்ப் பாடசாலைகள், சில ஆலயங்கள் என்பன முன் எடுத்துள்ளன. ஆயினும் ஒருங்கிணையும் அடியார்களின் ஆலய நம்பிக்கையுடன் கூடிய நன்கொடைகள், மனித வலுக்கள் மாயம் இன்நாட்டின் அறப்பணிகளின் வளர்ச்சிக்கும் தாயக மறுமலர்ச்சிக்கும் ஆலயங்கள் மேலும் கூடிய பணிகளை ஆற்ற முடியும்.

இந்நிலையில் எம் அயல் வழிபாட்டு தலமாக அமையப் பெற்ற ரூற்றிங் இலண்டன் சிறீ முத்துமாரி அம்மன் ஆலயம் இத்துறைகளில் ஆற்றிவரும் பணிகள் போற்றுதற்கு உரியன. வெள்ளிதோறம் இங்கே தமிழ் சைவ கலை துறைகளில் வகுப்புகள் இடம் பெறுகின்றன. சங்கீத பூஷணம் திரு திருமதி ஆறுமுகசாமி திரு மணிவண்ணன் ஆகியோர் இதில் தொண்டாற்றுகின்றனர். வெளிக்களங்களிலும் இம்மாணவர்கள் தம் கலைத் திறங்களை வெளிப்படுத்துகின்றனர். ஆலயத்துக்கு பிள்ளைகளை அழைத்துவரும் பெற்றோர் வழிபாட்டில் ஈடுபடுகின்றனர். ஆண்டுதோறும் முழுநாள் விழாவாக இடம்பெறும் முத்தமிழ் விழா மாணவர் திறமைக்குப் பரிசளிப்பதோடு மக்களுக்கு கலை விருந்து அளிக்கின்றது. எதிர்வரும் நவராத்திரி ஒன்பது தினங்களும் இயல் இசை நாடக விழாக்களாக அமைய ஏற்பாடுகள் செய் யப்பட்டுள்ளது. அண்மிய நிகழ்வுகளாக ஈழத்தில் இருந்து வருகை தந்த கலாநிதி சிவ அன்பு, அறிஞர் சுகிசிவம் திரு அறுதிருமுருகன் ஆகியோர் சொற்பொழிவுகளும் இடம் பெற்றன. சென்னை பேராசிரியை சரஸ்வதி இராமநாதன் அவர்களின் தொடர் சொற்பொழிவுகள் 21 நாள் உற்சவ திகங்களிலும் இடம்பெற்றது. இவ்வாண்டு

ஆக்கப்பட்ட சித்திரதேரின் விக்கிரகங்களை ஆக்கிய தேவசேனாதிபதி சிற்பாச்சாரி பாலகமாரன் ஸ்தபதி மற்றும் வாகன சிற்பி ஜெயகாந்தன் ஆகியோர் சிறப்பிக்கப்பட்டது கலைக்கு அளிக்கப்பட்ட கௌரவம் எனலாம்.

ஐந்து பூசகர்களுடன் அன்றாட பூசைகள் கிரியைகள் நல்லமுறையில் அமைகின்றன. திருமண மண்டபம் பொதுப்பணிகளுக்கு இலவசமாக பயன்படுத்த வாய்ப்பளிக்கப்படுகின்றன. அடியவர்கள் ஆலயத்தில் தாயக அவலத்தை நினைவுபடுத்தக் கூடிய வகையில் தமிழ் ஈழ எல்லையைக் கொண்ட இலங்கைப்படமும் துயர நிலைகளும் வடிக்கப்பட்டுள்ளன. இவ்ஆலயத்தின் சார்பான அண்மிய தாயக அறப்பணிகளாக £1000 திரு அறுதிருமுருகன் ஊடாக வயதானோர் வதிவு இல்லத்துக்கு நன்கொடையாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. திரு பழ நெடுமாறன் தலைமையிலான அனைத்து தமிழ் அமைப்புகளின் கூட்டணிக்கு 26 தமிழர் உயிர்காப்பு நிதியாக £500 இவ் ஆலய சிவயோகம் அறக்கட்டளை அமைப்பு தந்தது. ஈழம் மகளிர் உளவள நிலையத்துக்கு ரூபா 50,000/—, புதுக்குடியிருப்பு இனிய வாழ்வு இல்லத்துக்கு ரூபா 50,000/— என்றும் நன்கொடைகள் சேர்ப்பிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி யோகர் சுவாமிகள் திருவடி நிலைய முதியோர் இல்லமும் இவ் ஆலய அமைப்பின் நன்கொடையாக ரூபா 50,000/— பெற்றுள்ளது. உள்ளூர் சமய சமூக பணிகளுக்கும் பல வகைகளில் ஆலயம் உதவியுள்ளது. இவை அண்மைக்கால பணிகளில் சில என்னும்போது இவ் ஆலய சிவயோகம் அறக்கட்டளைகள் அமைப்பை பாராட்டாமல் இருக்க முடியாது. இத்தகைய நன்கொடைகள் ஆலய வருமானத்தில் ஒரு பகுதியாக அமைய வேண்டும் என்பதை அறக்கட்டளை யாப்பு விதிகளில் உள் அடங்கியமையும் இம்மேலானர்களின் பெருந்தன்மை எனலாம். இத்தனைக்கும் இடையே ஆலயத்துக்கென இம்மூன்றாண்டுகளில் 25 லட்சம் பவுண்கள் பெறுமதியான சொத்துரிமைகளை இவ்வாலயம் தேடிக் கொண்டுள்ளது என்பது வியப்பான வளர்ச்சியல்லவா? இவ்வளர்ச்சியின் மூலகர்த்தாவான நிர்வாகி திரு.நா.சீவரத்தினம் தன் முழு நேர உழைப்பையும் ஆலய வளர்ச்சிக்குரியதாக்கி இன்னமும் ஓடிக்கொண்டே இருக்கிறார். நூலகம், பாடசாலை, கலாச்சாரக்குழு, தொண்டர்படை என்று இன்னமும் தான் தேட வேண்டியவை ஏராளம் என்கிறார் அவர்.

எல்லா ஆலயங்களும் இத்தகைய அறப்பணிகளில் தம் கவனத்தை மேலும் விஸ்தரிக்குமா?

**SHIPPING - AIR FREIGHT - TRAVEL**

**UNACCOMPANIED BAGGAGE - PERSONAL EFFECTS, HOUSEHOLD GOODS, VEHICLES, MACHINERY ETC**

**TO COLOMBO AND OTHER WORLD WIDE DESTINATIONS**

**MAIN AGENT FOR AIRLANKA**

PASSENGER TICKETS AND UNACCOMPANIED BAGGAGE

All Your Goods Go To Our Bonded Warehouse in Colombo

**WE WILL ALSO FLY YOU ANYWHERE, ANYTIME ON SCHEDULED FLIGHTS AT LOW PRICES**

14

**GLEN CARRIERS LIMITED**

**Allied Way, off Warple Way, Acton, London W3 0RQ**

**Tel: 0181 740 8379/ 0181 749 0595**

**Fax: 0181 - 740 4229 Telex: 929657 Glenca G**

**BONDED WAREHOUSE**

**LAKSIRISEVA, 253/3 AVISSAWELLA RD, COLOMBO 14, TEL: 575576**

# சைவ சமயத் கொடி "நந்தி"

"ஐந்து கரத்தனை யானை முகத்தினை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே"

என்பது திருமந்திரம், திருமந்திரம் பன்னிரு திருமுறைகளில் பத்தாவது திருமுறை என்று கூறப்படுகின்றது. திருமந்திரம் பாடியவர் திருமூலர்.

திருமந்திரத்திலுள்ள மூவாயிரப் பாடல்களில் கடவுள் வாழ்த்தும் ஒன்று. ஓராண்டு காலம் உலகின் முழுமுதற் தெய்வமாகிய எல்லாம் வல்ல சிவபெருமானை நினைந்து தியானம் செய்து அருளிய பாடலாகும்.


நந்தி யென்றால், எருது விடை ஏறு இவ்வாறு பொருள் படினும் வெறுமனே மாடு என்று பலர் சிந்திப்பதனால், சிவன்தான் என்ற பொருளை மறந்து விதண்டா வாதம் செய்கின்றனர்.

திருமூலர் பெரிய புராணத்தில் பேசப்படுகின்றது உண்மை. ஆனால் திருமூலர் காலம் பெரிய புராண காலமென்று கூற முடியாது.

கைலாயத்திலிருந்து முனிவர் அகத்தியரைத் தரிசிக்க வருகின்றார். அகத்தியரைத் தரிசித்த பின் கையிலாயம் திரும்பும்போது தான் ஒரு அற்புத சம்பவத்தில் அந்த முனிவர் கூடுவிட்டுக் கூடு பாய்ந்தார்.

இறைவனால் அருளப்பட்ட எழுத்து மொழியாகிய ஆகமம் தமிழில் எழுதுவதற்காக முனிவரின் சடலம் எரிந்து விடுகிறது. இறந்த மூலனின் உடலில் புகுந்து முனிவரின் உயிர் திருமூலராகி உலகிற் சைவமும் சைவம் அனுட்டிக்கும் தமிழரும் உய்ய வேண்டித் திருமந்திரம் செய்த திருமூலர் எல்லாம் வல்ல எம்பெருமான் நந்தியாக இருந்து ஞான விநாயகனைத் தந்ததாக **"நந்தி மகன் தனை ஞானக் கொழுந்தினை"** யென்று பாடுகிறார்.

இவ்வாறு பல பாடல்களில் நந்தி சிவபெருமானே யென்று வரையறுத்துத் திருமூலர் பாடுவதை திருமந்திரத்திற் பரக்கக் காண முடிகின்றது என்று எம்பெருமானை நந்தி யெனத் திருமூலர் பேசுகிறார்.



"குருவே சிவனெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென் பதுகுறித்தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே யுரையுணர் வற்றதோர் கோவே"

என்றும்

"தானந்தி சீர்மையுட் சந்தித்த சீர்வைத்த
கோனந்தி யெந்தை குறிப்பறி வாரில்லை
வானந்தி யென்று மகிழும் ஒருவற்கு
தானந்தி யங்கித் தனிச்சுட ராமே"

அதாவது தானே சிவபெருமானென விளங்கும் நந்தி கடவுள் வகுத்தருளிய சீலம் நோன்பு முதலியவற்றுள், இறவாத நானெறியுள் அறிவு நெறியாகிய நன்னெறியின் கண் காணப்படுகின்ற திருவருள் முறைமையினை நல்கியருளிய நந்தியாகிய சிவபெருமான் அவனுடைய திருவருட் குறிப்பினை அறிவார் இல்லை. அவனருளால் அறிவார்க்கு அவன் மேலாகிய சிவன் எனக் காணப்படுவன். அவ்வுண்மையினைக் கண்டு ஆன்மாக்கள் பெரு மகிழ்வு கொள்ளும். அச்சிவனே மாலைக் காலத்து விளங்கும் அருட் சோதியு மாவான்.

எனவே நந்தி என்பது சிவன்தான் என்பதைத் திருமூலர் தெளிவாக உணர்த்தியுள்ளார்.

மணிவாசகப் பெருமான் திருப் பள்ளியெழுச்சிப் பதிகம் முதலாவது பாடலில் "ஏற்றுயுர் கொடியுடையாய் என்னை யுடையாய் பள்ளி எழுந்தருளாயே என்று பாடுகின்ற பாடலில் இருந்து "ஏற்றுயர் கொடி" என்ற அடிகளில் எல்லாம் வல்ல எம்பெருமானே சைவ சமயச் சின்னக் கொடியாக நந்திக் கொடியை வைத்தி ருப்பது புலனாகிறது.

இன்று இவ்வாறிருக்க பண்டைக் காலத்தில் நந்திக் கொடி இருந்திருக் கின்றது போகப் போக காலங்கள் உருண்டோட நந்தி கொடியின் ஞாபகமற்று வேறு



ஏதாவது கொடிகளை இன்றுவரை நாட்டி வருவதுவே துணையாக உள்ளது.

நந்தியின் நிறம் வெண்மையான இடபம் ஓவியமாக மிருகமாகக் காணப்படும்போது சிவ பெருமானின் சிந்தனை வரும் என்பதை மறந்து விட்டார்கள். ஆனால் உண்மையான சிவ பக்தர்கட்கு நந்தியை ஓவியத்திலும் சிற்பத்திலும் உயிருடனும் கண்டால் சிவபக்தி ஊற்றுக் கேணிபோலச் சுரக்கின்றது.

பலகாலமாகத் தாய் நாட்டிலும் சேய் நாட்டிலும் நந்திக் கொடி பறந்த ஞாபகமில்லை. நந்தி வாகனம் சிவன் கோவில்களில் காணமுடிகின்றது.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்பதற்கேற்ப சைவ சமய உண்மைகளை கொழும்பு மாநகரச் சைவ முன்னேற்றச் சங்கம் அகில இலங்கை ரீதியாகவும் கடல் கடந்து லண்டன் மாநகரிலும் சிறப்பான பணிகள் செய்து வருவதை அதன் அறிக்கை மூலம் காணக் கிடக்கின்றது.

சைவ சமயத்தையும் தமிழ் மொழியையும் இருகண்களாகவும் மூச்சாகவும் பேச்சாகவும் உயிர் நாடியாகவும் மேற்கொண்ட சைவ முன்னேற்றச் சங்கம் சைவ சமயத்தவர்கள்,சைவதாபனங்கள் இதுவரை மறந்திருந்த நந்திக் கொடியைப் பேரூக்கத்துடன் சாதனையிற் கொண்டு வந்தமை, சைவம் உள்ள வரை மறக்க முடியாது பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய வரலாற்றுச் சின்னமாகும்.

கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கத்தலைவர் சிவநெறிப்புலவர் சின்னத்துரை தனபாலாவாகும்.


"மகன் தந்தைக்காற்றும் உதவி
சிவன் தந்தை
என்னேற்றான் கொல் எனும்
சொல்"

என்றாங்கு யாராலும் சிந்திக்க முடியாத, இதுவரையும் யாரும் சிந்திக்காத சைவ சமயத்தவரின் மிகத் தொன்மையானதும் உரிமையானதுமான நந்திக் கொடியை ஸ்ரீ லங்கா மாதாவின் பெரும்பாலான இடங்களிலும் சைவ ஆலயங்கள் சைவ ஆதினங்கள் சைவ தர்ம தாபனங்கள் யாவும் பறக்கச் செய்தமை நாம் முன்பு செய்த புண்ணியமே யாகும்.

கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கத்தின் 45ம் ஆண்டின் நிறைவு விழாவை யொட்டி சைவ சமயத்தின் சின்னமாகிய நந்திக் கொடியை வரவழைத்து அகில இலங்கையில் உள்ள சைவ ஆலயங்களாகிய திருகோணேஸ்வரம் முதலான சைவ ஆலயங்களுக்கும் சைவ இந்து தாபனங்களுக்கும் பாடசாலைக்கும் இலவசமாக அளிக்கப்பட்டதை மிகவும் போற்றுதற்குரிய அரிய செயலாகும்.

அத்தோடு மேற்படி சங்க 45வது ஆண்டு விழாவில் நந்திக் கொடியை ஏற்றி ஆரம்பித்து வைத்தமை வரவேற்கத்தக்க விடயமாகும்.

**சிவமயச் செல்வி,**
**சைவநன்மணி**
**புலவர். ஸ்ரீவிசுவாம்பா**
**விசாலாட்சி**



# திருக்களிற்றுப்படியார்

## — ஓர் ஆய்வு

டாக்கர் கோமதி சூரியமூர்த்தி
இணைப்பேராசிரியை, சைவசித்தாந்தத்துறை,மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.



### முன்னுரை

முதற்கண் ஆசரியர் வரலாறு குறிப்பிட்டு பின் காலம், நூல் அமைப்பு, நூற்பெயர்க்காரணம், நூற்சிறப்பு எடுத்துரைக்கப்படுகின்றது. பின் நூல் நுவலும் சைவசித்தாந்தக் கருத்துக்கள் ஆய்வு செய்து கூறப்படுகின்றன. கருத்துக்களை அரண் செய்யும் விதத்தில் ஆங்காங்கே திருமுறைக்கருத்துக்கள், சாத்திர நூற்கருத்துக்கள், திருக்குறன் முதலியன ஒப்பிட்டுக் காட்டடப்படுகின்றன. இறுதியில் முடிவுரையில் முடிவுகள் தொகுத்துத் தரப்படுகின்றன.

### ஆசிரியர் வரலாறு

திருக்களிற்றுப்பாடியவர் ஆசிரியர் திருக்கடவூர் உய்ய வந்த தேவநாயனார் ஆவார். இது இவருடைய தீட்சாநாமம். இவருடைய இயற்பெயர் தெரியவரவில்லை. இவர் ஆடுமேய்க்கும் குலத்தைச் சேர்ந்தவர். திருவுந்தியார் ஆசிரியரான திருவியலூர் உய்ய வந்த தேவ நாயனாரின் மாணக்கர் ஆளுடைய தேவ நாயனார். இவர் வஙீவேங்கடம் முதல் தென்குமரிவரை தமிழ் பரப்பி வந்தார். ஒருசமயம் திருக்கடவூருக்கு வந்தார். அங்கு நம் ஆசிரியரின் பக்குவநிலை கண்டு தீட்சை பண்ணி திருவுந்தியாரைக் கற்றுக் கொடுத்து தன் ஆசிரியர் பெயரை அவருக்குச் சூட்டியருளினார். திருக்கடவூர் உய்யவந்த தேவர் திருவுந்தியாருக்கு விளக்கமாக திருக்களிற்றுப்படியாரை அருளிச் செய்தார். திருக்களிற்றுப்பாடியாரின் ஆசிரியர், திருவுந்தியார் ஆசிரியரின் மாணாக்கரின் மாணக்கர் என்பதற்க அவருடைய நூலிலேயே இரு சான்றுகள் உள.

"என் அறிவு சென்றளவில் யான் இன்று அறிந்தபடி
என் அறிவில் ஆர் அறிக என்ற ஒருவன்
சொன்னபடி
சொல்லக்கேள் என்று ஒருவன் சொன்னான்
எனக்கு அதனைச்
சொல்லக்கேள் நான் உனக்குச் சொல்" *(செ.3)*

இப்பாடலில் "என் அறிவு சென்றளவில் யான் இன்று அறிந்தபடி அறிக என்று ஒருவன் சொன்னது — திருவியலூர் உய்ய வந்த தேவரைக் குறிக்கும். "ஒருவன் சொன்னபடி சொல்லக்கேள் என்று ஒருவன் சொன்னது — ஆளுடைய தேவநாயனாரைக் குறிக்கும். 96ஆம் பாடலில் எல்லா உயிர்களையும் ஆட்கொள்ளும் சிவபெருமான் என்னளவிலும் ஆளுடைய தேவன் **என்னும் திருப்பெயருடைய குருவாகத் திருமேனி கொண்டு எழுந்தருளி என்னை ஆட்கொண்டார் என்கின்றார்.**

**காலம்** நூலில் பெரியபுராண நாயன்மார்கள் பலர் பேசப்படுவதால் இந்நூல் பெரியபுராணத்திற்குப் பிற்பட்டது எனலாம். சேக்கிழார் இரண்டாம் குலோத்துங்கச் சோழன் காலத்தைச் சேர்ந்தவர் (கி.பி. 1133—1150). சேக்கிழார் நூல் செய்தது கி.பி 1140—1145. திருக்களிற்றுப்படியார் காலம் அதற்குச் சற்றுப் பிந்தி. கி.பி. 1148 என்பர்.

### நூல் அமைப்பு

நூறு வெண்பா கொண்டது. சிவஞான போதத்திற்கு விளக்கமாக சிவஞான சித்தியார் அருளிச் செய்யப்பட்டது போல திருவுந்தியாருக்கு விளக்கமாக அருளிச் செய்யப்பட்ட நூல் திருக்களிற்றுப்பாடியார்.

### நூற்பெயர்க்காரணம்

நூலாசிரியர் தாழ்ந்த குலத்தைச் சேர்ந்தவராதலால் சாதி வேற்றுமை மிகுந்திருந்த அக்காலத்தில் அறிஞர்கள் சிலர் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆசிரியர் அந்நூலைத் தில்லை நடராசப் பெருமான் சந்நிதிக்குச் செல்லும் பஞ்சாக்கரப்படியில் வைத்தார். அப்போது இருபுறமுள்ள கல்யானைகள் உயிர் பெற்றுத் தம் தும்பிக்கையால் அந்நூலை எடுத்து நடராஜப் பெருமான் திருவடிக்கீழ் வைத்தன. இதனைக் கண்ட அறிஞர்கள் இந்நூலை ஏற்றுக் கொண்டனர். எனவே அந்நூல் திருக்களிற்றுப் படியார் எனக் காரணப் பெயர் பெற்றது என்பது கர்ணபரம்பரையாக வழங்கிவரும் செய்தி ஆகும்.

## நூல் சிறப்பு

இந்நூல் திரு என்னும் அடைமொழியை முன்னும், ஆர் என்னும் சிறப்பு விகுதியைப் பின்னும் பெற்றுள்ளது. இந்நூலில் ஒரு பாடல் சைவ சமயத்தின் சிறப்பினை உணர்த்துகின்றது. (செ.65) முன்னோர் மொழி பொருளைப் பொன்னே போல் இந்நூல் போற்றுகின்றது. இது ஓர் அனுபவநூல். இந்நூல் சித்தாந்தக் கருத்துக்களை உவமைகள் மூலம் எளிமையாக விளக்குகின்றது. தத்துவராயர் தாம் எழுதிய பெருந்திரட்டு என்னும் நூலில் திருக்களிற்றுப்பாடியாரிலுள்ள 3 பாடல்களைச் சேர்த்துள்ளார். இது போன்று வேறு எந்தச் சித்தாந்தப் பாடலையும் அவர் சேர்க்கவில்லை.

## சைவசித்தாந்தக் கருத்துக்கள்

"பல கலை ஆகம வேதம் யானையினும் கருத்துப் பதி பசு பாசம் தெரித்தல்" (சிவப்பிரகாசம், செ.13 என்பர். இம்முப்பொருட்களுள் மேலான பொருள் பதி என்பதை "பதி பரமே" (சிவப்பிரகாசம், செ.13) என்பது உணர்த்துகின்றது. எனவே முதற்கண் பதி இயல்புகள் கூறப்படுகின்றன.

### பதி இயல்புகள்

### பதி அநாதி

"அநாதி சிவன்" (திருக்களிற்றுப்பாடியார் செ.43) என்று இறைவனை அநாதி என ஆசிரியர் கூறுகின்றார்.

### உலகிற்கு முதற்பொருள்

"அம்மையப்பரே உலகிற்கு அம்மையப்பர்"
"சிவன் முதலே அன்றி முதலில்லை" (செ.64)
முதலிய தொடர்கள் இறைவனே உலகிற்கு முதற்பொருள் என்பதை உணர்த்தும்.

### வியாபகப் பொருள்

"வாகனமும் மண்ணகமுமாய் நிறைந்த வான்பொருள்" (செ.49)
"ஆதனமும் ஆதனியுமாய் நிறைந்து நின்றவன்" (செ.67) என்றது அவனின் வியாபகத் தன்மையை உணர்த்தும், இருத்தற்குரிய இடம். ஆதனி— அவ்விடத்தில் இருக்கும் பொருட்களாகிய உயிர்த் தொகுதியைக் குறிக்கும்.

### ஒப்பற்ற பொருள்

"ஒன்றோடு உவமிக்கல் ஆவதும் தானில்லை"
(செ.10)
என்றது இறைவனுக்கு ஒப்பு ஒருவருமில்லை என்பதை உணர்த்தும்.
திணைபால் கடந்தபொருள்
"ஆணாகிப் பெண்ணாய் அலியாகி நின்றானும்
(செ.88)
என்றதும் இறைவன் திணை, பால் இவற்றைக் கடந்தவன் என்பதை உணர்த்தும்.

### உருவு தாங்கல்

"அகளமாய் நின்ற அம்பலத்து எம் கூத்தன்
சகளமயம் போல் உலகில் தங்கி" (செ.4)
இங்கு அகளம் என்றது அருவத்தையும், சகளம் என்றது உருவத்தையும் குறிக்கும். அருவமாகிய இறைவன் உருவு தாங்கி வருதை ஆசிரியர் உணர்த்துகின்றார். இதனை ஆசிரியர் பின்வரும் உவமை மூலம் உணர்த்துகின்றார். கடல் நீரில் உவப்புச்சுவை அருவமாக உள்ளது. அது சூரிய வெப்பத்தால் குறித்தகாலத்தில் உப்பாக உருவு கொள்கின்றது. அதுபோல அருவமாகிய இறைவன் குறித்த காலத்தில் உருவம் தாங்கி வருகின்றான் என்று ஆசிரியர் கூறுகின்றார் (செ.91)

### உயிர்களின் பொருட்டே உருவம்

இறைவன் அவ்வாறு உருவு தாங்கி வருவது ஏன் என்பது சிந்தித்தற்குரியது. இறைவன் உருவு தாங்கி வராவிடில் உயிர்கட்கு ஆகமங்கள் கிடைத்திரா. போக உணர்வோ, யோக உணர்வோ உண்டாகா. எனவே உயிர்களின் பொருட்டே அவன் உருவு தாங்கி வருகின்றான் என்பதை,
"ஆகமங்கள் எங்கே அறுசமயம் தான் எங்கே
யோகங்கள் எங்கே உணர்வு எங்கே— பாகத்து
அருள்வடிவும் தானுமாய் ஆண்டிலேனல் அந்தப்
பெருவடிவை யார் அறிவார் பேசு" (செ.5)
என்ற பாடல் உணர்த்துகின்றது. இறைவன் ஆகமங்கள் அருளிச் செய்ததை,
"மன்று மாமலை மகேந்திரமதனில்
சொன்ன ஆகமம் தோற்றுவித் தருளியும்"
(கீர்த்தித் திருஅகவல், வரி 9—10)
என்ற திருவாசகத்தால் அறியப்படும். இவ்வாறு இறைவன் உருவு தாங்கி வருவதால் அவனும் நம்மைப் போன்றவன்தானோ. அவனுடைய உருவம் மாயா காரிய வடிவமோ என்ற ஐயம் எழலாம். அதனைத் தெளிவிக்கும் பொருட்டு ஆசிரியர் அவனது உருவம் அருள்வடிவம் என்பதையும் உணர்த்துகின்றார்.
"அருளுரு உயிருக்கு என்றே ஆக்கினன் அசிந்தன் அன்றே"
(சிவஞானசித்தியார் சுபக்கம், 67)
என்ற அருணந்திசிவாசாரியர் கூறுவது இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

### தனித்த வடிவில்லாதவன்

"ஒன்றும் குறியே குறியாதலால் அவனுக்கு
ஒன்றுங் குறியொன்று இலாமையால்" (செ.10)
என்று திருக்களிற்றுப்பாடியார் ஆசிரியர் இறைவன் தனக்கென ஒரு குறிப்பிட்ட வடிவம் இல்லாதவன் என்பதை உணர்த்துகின்றார்.
'எவ்வுருவோன் நும்பிரான் என்பார்கட்கு என்னுரைக்கேன்
எவ்வுருவோ நின்னுருவம் எது" (அற்புதத் திருவந்தாதி, செ.61)என்று காரைக்காலம்மையார் கூறுவது இங்கு ஒப்புநோக்கத்தக்கது.
(இன்னும் வரும்,,,,,,, )

# சைவ சமய வகுப்பு

## "உண்மைச் சமய அறிவு வளராமல் வெளிநாடுகளில் எமது கோவில்கள் நிலைக்கமாட்டா"

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலை 4.00 மணி தொடக்கம் 5.45 வரைக்கும் அம்மன் சந்நிதியிலே சைவ சமய வகுப்புகள் நடைபெறும்.

**மேலதிக விபரங்களுக் கோவில் நிர்வாக சபை அல்லது**

க.இராஜமனோகரன் BSc Eng. M.I.E.Aust.: M.Inst.Pet (Lon)
டொக்டர் ச.இராஜமனோகரன் M.B.B.S; M.R.C.P (UK) Dip.G.U.M; DFFP.
திருமதி வி.பரமகுமரன் N.N.E.B

**Tel: 0181 810 0835, 0118 932 1438, 0181 900 1279**
**5 Chapel Road, London W13 9AE**

### ஞாயிற்றுக்கிழமை மாலை

| நேரம் | செயல்வகை |
|---|---|
| 4.15 — 4.30 | தமிழ் அறிதல் |
| 4.30 — 5.00 | சைவம் உணர்தல் |
| 5.00 — 5.05 | வழிபாட்டு முறை தெரிதல் |
| 5.05 — 5.10 | ஒழுக்கம் பேணல் |
| 5.10 — 5.30 | திருமுறை ஓதல் |
| 5.30 — 5.45 | சமயப் படம் பார்த்தல் |
| 5.45— 6.00 | வழிபாடு இயற்றல் |
| 6.00 — 6.15 | உணவு பரிமாறல் |

**முக்கிய குறிப்புக்கள்**

வகுப்புக்கள் இலகு தமிழிலே நடைபெறுமாயினும் தேவையான இடங்களிலெல்லாம் ஆங்கிலம் பயன்படுத்தப்படும். ஆகவே 'தமிழ் தெரியாது' என்று எண்ணி வராமல் விட வேண்டாம். சைவத்தோடு தமிழையும் கற்கும் அரிய சந்தர்ப்பம் இது. ஒரு கல்லில் இரண்டு மாங்காய்!

சைவ சமயத்தைப் பிள்ளைகளுக்குப் படிப்பிக்குமளவு அறிவு பல பெற்றோருக்கு இல்லை. எனவே, பெற்றோரும் பிள்ளைகளோடு உள்ளே வருக; வீட்டிலே மீட்டலிற்கு இது உதவும்.

காலவரையறை (நேரக் கட்டுப்பாடு) மிக முக்கியம்
கோவிலிலே இடம் போதவில்லை என்னும் நிலை ஏற்படுமளவிற்கு அனைவரும் வருக!!

# இங்கிலாந்திலுள்ள சைவக் கோயில்களில் நான் காணும் திருத்தக்கூடிய தவறுகள்

1983ஆம் ஆண்டிலிருந்து இலங்கைத் தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து வர வர இங்கிலாந்திலும் ஏனைய நாடுகளிலும் சைவத்திருக்கோயில்கள் பல்கிப் பெருகிவிட்டன. நான் கடந்த 15 வருடங்களாக இந்நாட்டில் வசித்து வருகிறேன். இலங்கையிலே கோயிலுக்கு அருகிலே பிறந்து வளர்ந்ததால் சைவத்திலும் சைவ வழிபாட்டிலும் எனக்கு ஆழ்ந்த ஈடுபாடு உண்டு. அதனால் இங்குள்ள சைவக் கோயில்களில் நடைபெறும் சில தவறுகள் என் மனதை மிகவும் புண்படுத்துவதாக உள்ளன. அவைகளை உங்களுக்கு எடுத்துச் சொல்லி எனது வேதனையை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன். முடிந்தால் உரியவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனது பேச்சு எவரையாவது தனிப்பட்டமுறையில் சாடவோ அன்றி அவர்களின் மனதைப்புண்படுத்தவோ தயாரிக்கப்பட்டதல்ல. பலரது மனதை பயன்படுத்தி முடிந்தால் நமது சமயத்தில் நல்லவை நடக்க வேண்டும் என்ற சிந்தைனயின் வெளிப்பாடே இது.




இன்று பூசைக்குரிய மொழியான வடமொழியை அகற்றிவிட்டு நமக்கு விளங்கும் மொழியிலேதான் பூசை செய்ய வேண்டும் என்று ஒரு போராட்டமே இப்போது தொடங்கியிருக்கிறது. இதிலே வேடிக்கை என்னவென்றால் தமிழில் வழிபாடு செய்வதற் கென்றே உள்ள பன்னிரு திருமுறைகள் கந்தர் அநுபூதி, கந்தர் அலங்காரம், திருப்புகழ், அபிராமி அந்தாதி எனப்பல அருளாளர்கள் பாடிய அருட்பாடல்கள் அவ்வளவையும் விட்டு கரும்பிருக்க இரும்பு கடித்தேத்தவாறு என அப்பர் அடியார்கள் சொல்லியது போல தற்காலத்தில் யார் யாரோ எழுதிய பாடல்களையெல்லாம் பஜனை என்ற பெயரில் பாடி வருகிறார்கள். கேட்டால் இவற்றைப் பாடினால்தான் அற்புத சக்தி எல்லாம் வரும் என்கிறார்கள். தேவார திருவாசகம் தனக்கு விளங்கவில்லை என்கிறார்கள். இவற்றையெல்லாம் கண்டு பாராமுகமாக தர்மகர்த்தாக்கள் இருப்பது அவர்களுக்கே சைவ வழிபாட்டில் நம்பிக்கை இல்லையோ என எண்ண வைக்கிறது. இது மிகவும் வேதனைக்குரியது. திருமுறைகளை ஓதுவதால் வரும் பயனை இவர்கள் அறியவில்லையா? உதாரணமாக வேயுறு தோழி பங்கன் பாடிவர நவக்கிரக தோஷம் வராது இடரினும் தளரினும் பதிகம் பாடுவதால் செல்வம் நிறையும். மேலும் இன்னும் எத்தனையோ எடுத்துச் சொல்ல நேரம் போதாது.

கோயில் வழிபாட்டுக்குப் போகும் போது குளித்து ஆசாரமாகப் போக வேண்டும். இந்த நாட்டின் காலநிலை காரணமாக வேட்டி அணிந்து போவது எல்லாருக்கும் குறிப்பாக வயதானவர்கள் நோயற்றவர்கள் குழந்தைகளுக்கு இது மிகவும் கஷ்டம். ஆனால் தேவாரம் பாடுபவர்கள் சிவாச்சாரியார்களுக்கு உதவி செய்பவர்கள் சிவத்தொண்டு செய்பவர்கள் உபயகாரர் போன்றோர் வேட்டி அணிந்து திருநீறு பூசி வருவது நன்றாகும். பார்ப்பவர்களுக்கும் அப்படி அணிந்து வருபவர்களுக்கும் இது தெய்வ உணர்வைத் தூண்டுமல்லவா?

இறைபணிகளில் ஈடுபட்டுள்ளவர்கள் சைவ சமயத்தின் அடிப்படைக்கு முரண்பாடான மது அருந்துதல் மாமிசம் புசித்தல் போன்றவற்றை விலக்கி நடத்தல் நன்மை பயக்கும், எமது அடுத்த தலைமுறைக்கு உதாரண புருஷர்களாக இருக்க வேண்டிய இவர்களே இவ்வாறு நடந்தால் இவர்களைப் பார்த்து வளரும் இளைய சமூதாயம் என்னவாகும்.

ஓர் உபந்நியாசத்தில் கிருபானந்தவாரிசுவாமிகளை ஓர் அன்பர் கேள்வி கேட்டார் சிவன் கோயில்களிலே திருமாலை வைத்திருக்கிறார்களே. விஷ்ணு கோவில்களில் ஏன் சிவனை வைப்பதில்லை. அதற்கு வாரியார் சொன்னபதில் அண்டாவில் குண்டாவை வைக்கலாம். குண்டாவில் அண்டாவை வைக்கமுடியுமா? என்பது இது எதைக் குறிக்கிறது? சிவன் கோயில்களிலே மட்டும்தான் எல்லாத் தெய்வங்களையும் வைக்கலாமே தவிர மற்றைய கோவில்களிலே சிவனைப் பரிவார மூர்த்தியாக வைக்க முடியாது. இது போதாதன்று அருவத்திருமேனியான சிவலிங்கத்துக்குப் பக்கத்தில் உருவத்திருமேனியான அம்பாளை வைத்து

வழிபடுகிறார்கள். சைவசமயத்தின் பெயரால் நடக்கும் தவறுகளை வன்மையாகக் கண்டித்த ஆறுமுகநாவலர் பெருமான் வாழ்ந்த நாட்டுமக்களே இவ்வாறு செய்வது வேதனைக்குரியது. ஏன் சிவலிங்கம் எனக் கேட்டால் மோட்ச அருட்சனைக்கு என்கிறார்கள். கோயில்கள் முறைப்படி வழிபாடு செய்யவா? அல்லது வியாபாரத்துக்கா? திண்டாடுகிறேன்.

மாதந்தோறும் லண்டனில் புதுப்புதுக் கோவில் புற்றிசல்கள் போல உருவாகின்றன. இப்படிப்பல கோவில்கள் வருவது இங்குள்ள தமிழரின் பக்திச் சிறப்பைக் காட்டுகின்றது என நீங்கள் நினைக்கலாம். ஆனால் இவைகள் பக்கதியால் ஆனவை அல்ல. ஒற்றுமை இன்மையால் விளைந்தவையே. ஒற்றுமை இன்மை கோயிலோடு நிற்காது கோடு வரை அதாவது நீதிமன்றம்வரை சில வேளைகளில் போய் வருகிறது இது




பரிதாபத்திற்குரியது.

சிவாச்சாரியார்கள் சிவாகம முறைப்படி பூசை செய்வதற்கு சில தர்மகர்த்தாக்கள் முட்டுக்கட்டையாக இருந்து தாம் நினைத்ததைப் புகுத்த முயல்கிறார்கள். அதாவது சிவாச்சாரியார்களுக்கு கொடுக்க வேண்டிய மரியாதையைக் கொடுப்பதில்லை. அவர்களை வெறும் சம்பளம் வாங்கும் வேலையாட்கள் போல நடத்துகிறார்கள். சிவாச்சாரியர்களைப் பிடிக்கவில்லை என்றால் அவர்களை ஒதுக்கிவிட்டுத் தாங்களே பூசை செய்யலாமே. சிவாச்சாரியார்களும் சிலவற்றைப் பிழை என்று தெரிந்தும் எடுத்துக் கூறாமல் பின்விளைவுகளைக் கருதி மௌனம் சாதிக்கிறார்கள்.

அடுத்ததாக மிகவும் வேதனைக்குரியதென்ன வென்றால் ஈமைக்கிரிகை செய்யும் சைவக் குருக்கள் கோயில் கிரியை செய்வதில்லை. ஆனால் இங்கே கிரியை செய்த அன்றே மூலஸ்தானம் வரை சென்று அருட்சனை செய்யும் அவல நிலையைக் காண்கின்றோம்.

குரு வழிபாடு எமது சமயத்தில் உள்ள வழிபாடுதான். அவர் அவர் விருப்பத்திற்கு ஏற்ப குருவைத் தெரிவு செய்யலாம். அது தனிப்பட்ட விடயம். ஆனால் குருவைத் தெய்வத்திற்கும் மேலாக வைக்க முடியாது. ஆனால் சில கோவில்களில் உற்சவ காலத்தில் அம்பாளை அருகில் இருக்கும் குரு மண்டபத்திற்கு எழுந்தருளச் செய்கிறார்கள். இது வேறு எங்கும் நான் கண்டதில்லை. இது சரியானதல்ல. நான் லண்டன் கோவில்கள் பலவற்றுடன் தொடர்பு கொண்டு உபயம் செய்ய விசாரித்தபோது வெள்ளி ஞாயிறு கிழமைகளில் பூசை செய்வதாக இருந்தால் இத்தனை பேருக்குச் சாப்பாடு போடவேண்டும் என்று சில கோவில்களில் நிபந்தனை விதிக்கிறார்கள். **அன்னதானம் வழங்குதல் ஏழைகளுக்கேயன்றி பணக்காரர்களுக்கல்ல**. அற்றார் அழிபசியைத்தான் தீர்க்க வேண்டும். இங்கோ பெரும்பான்மையானவர்கள் சாப்பாட்டை கொஞ்சமாக உண்டுவிட்டு குப்பைத் தொட்டியிலே போடுகிறார்கள். ஈழத்தில் குறிப்பாக வவுனியாவில் பல்லாயிரக்கணக்கான குழந்தைகள் முதியவர்கள் ஊனமுற்றோர் பசியால் வாடி நோய் வாய்ப்பட்டு தவிக்கும் இவ்வேளை சமயத்தின் பெயரால் குப்பைக் கூடையில் உணவை வீசுவது எந்த வகையில் தொண்டாக அமையும்? அன்பர்களே சற்றுச் சிந்தியுங்கள்.

இந்த நாட்டுச் சுகாதார முறைப்படி உணவு சமைக்கும் பாத்திரம் உண்ணும் தட்டு என்பவற்றை சில குறிப்பிட்ட விதிமுறைக்கு அமைய சுத்தப்படுத்த வேண்டும் என விதியுண்டு. பொதுமக்களுக்கு உணவளிப்பதானால் இதைக் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும். அல்லது ஒருமுறை மட்டும் உபயோகித்து எறிந்துவிடும் தட்டை உபயோகிக்கலாம். இந்த இரண்டு விதிகளையும் மனதில் கொள்ளாது சிலர் அரைகுறையாகக் கழுவி வைக்கும் தட்டில் உணவு வழங்குகின்றார்கள். கோயில்களிலே திரை போட்டபின் சில அன்பர்கள் வழிபடுகிறார்கள். மற்றும் நவக்கிரகங்களைச் சுற்றிக் கும்பிடுகிறார்கள். இவை தவிர்க்கப்பட வேண்டியவை. வெளிநாடுகளில் இருந்து வரும் சமய அறிஞர்கள் பேச்சாளர்கள் நான் சொன்ன இந்தத் தவறுகளை கட்டாயம் அவதானித் திருப்பார்கள். ஆனால் அவர்கள் இங்குள்ள தர்மகர்த்தாக்களின் தயவில் வருவதால் இவைகளை எடுத்துச் சொல்லத் தயங்கிவிட்டு விடுகிறார்கள். தவறுகள் நடக்கும் பொழுது அவற்றைச் சுட்டிக்காட்டி திருத்த வழி செய்யாமல் கற்றவர்கள் பாராமுகமாக இருப்பதும் ஒரு தவறுதான். நான் குறிப்பிட்ட இந்தத் தவறுகள் அனைத்தும் திருத்துவதற்கு பொருட் செலவோ அன்றி வேறு தடைகளோ இல்லை. ஆகவே தர்ம கர்த்தாக்களுக்கும் அறிஞர்களுக்கும் நான் விடுக்கும் வேண்டுகோள் தவறுகள் குற்றங்கள் அல்ல. தயவு செய்து திருத்துங்கள். எங்களையும் திருத்துக்கள். இளைய தலைமுறை அப்போதுதான் நாளைக்கு நன்றி சொல்லும் நன்றி வணக்கம். *

ஆசிரியர் பஞ்சலி

# இலண்டன் அருள்மிகு முத்துமாரியம்மன் கோவில்
# சிவயோகம்
# திருமணமண்டபம்

**இரு வருடங்களில் 200 திருமணங்களைக் கண்ட ராசியான திருமண மண்டபம்.**

**500 இருக்கைகள்**
**அழகிய மணவறைகள்**
**அலங்கார ஜோடனைகள்**
**இசைக் கருவிகள்**
**உணவு வசதிகள்**


சகலதும் சிறந்த முறையில் அமைந்துள்ள
இலண்டனில் உள்ள ஒரே ஒரு திருமண மண்டபம்
தொடர்புகட்கு:
நிர்வாகி
ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
சிவயோகம்

**தொலைபேசி: 0181 767 9881**

**தொலைநகல்: 0181 767 9881**

## ஓம் என்னும் பிரணவம் 1

ஓம் என்பது பிரணவ மந்திரமாகும். இது அ+உ+ம் என்ற மூன்றெழுத்தின் இணைப்பே "ஓம்" மனிதனின் உடலும் இறைவனின் இயற்கை வடிவான ஓங்கார வடிவத்துடன் அமைந்திருக்கிறது. மனித வடிவமும் அருள் வடிவம் தான். ஓம் என்ற பிரணவ வடிவம் "அ" என்பது எட்டும். "உ" என்பது இரண்டும் என்ற எண்களின் தமிழ் வடிவம்.



உயிர் எழுத்தும் மெய் எழுத்தும் சேர்ந்து உயிர் மெய்யதாவது போல் உயிரும் உடலும் சேர்ந்துதான் மனித வாழ்வு.

**சீ.கிருஷ்ணன் சிங்கப்பூர்.**

அவரவர் கையால் மனிதனின் உடல் எண் சாண் அளவுடையவது. மனிதன் விடும் —ரு வகை மூச்சுகள். (உள் மூச்சு வெளி மூச்சு) "உ" எழுத்து குறிக்கும் மூச்சு உள் மூச்சு வெளி மூச்சு. "ம்" ஆறு அறிவின் உணர்வு இயக்கத்தால் ஏற்படும் இன்பத்தை அது குறிக்கும். அத்துடன் "ஓம்" என்ற பிரணவம் *96* தத்துவத்துடன் விளங்கும். அஉம் என்ற எழுத்துக்களால் குறிக்கும் பெருக்கு தொகை 8x2x6 = 96.

இதனை சிலர் இப்படியும் கூறுவார்கள். அ என்பது முதல்வனான சிவனையும் உ என்பது உமையவள் எனப்படும் சக்தியினையும், சிவனும் சக்தியும் இணைந்த சிவசக்தியினையும் குறிக்கும்.

இச்சிவசக்தி வடிவமே, சொரூபமே வரி வடிவில் "ஓ" என பிள்ளையார் சுழியாவும் "உ" எனவும் உள்ளது. வழிப்படும் உருவவாக 'சிவலிங்கமும்' ஒலி எழுத்தாக சொல்லும்போது ஓங்காரம், பிரணவம் என்று ஆன்றோர்களும், சான்றோர்களும் சொல்கிறார்கள். இதனை திருமூலர் திருமந்திரத்தில்:

ஓமெனு ஓங்காரத் துள்ளே ஒரு மொழி
ஓமெனு ஓங்காரத் துள்ளே உருவம்
ஓமெனு ஓங்காரத் துள்ளே பல பேதம்
ஓமெனு ஓங்காரம் ஒண்முத்தி சித்தியே"

முதல்வரிக்கும் ஓம் என்பதை உச்சரிக்கும் பொழுது ஒரே சொல்லாகவும், இரண்டாம் வரிக்கு அன்னையின் கருவில் பிண்டம் தரிக்கும் பொழுதும் அது தாயின் வயிற்றிற்குள் காணும் காட்சி ஓம் என்றே தோன்றும், மூன்றாம் வரிக்கு ஒரே உச்சரிப்பாயினும், மூன்றெழுத்தையும் அதன் விளக்கத்தையும், பேதங்கள் பலவாறாகவும், நான்காவது வரிக்கு இதை சதா உச்சரித்து தியானிப்பதால் முக்கி— உயர்ந்த சித்தியும் கிட்டும் என்பதை பாடல் நமக்கு உணர்த்துகிறது.

## ஓம் என்னும் பிரணவம் 2

### முதல் எழுத்து:

"ஆதியிலே பராபரத்திற் பிறந்த சத்தம்
அருவுருவாய் நின்ற பாசிவமுமாகி
தோதி யென்ற சிவனிடமாய்ச் சத்தியாகித்
தொல்லுலகில் எழுவகையாந் தோற்றமாகி"
என்னும் சுப்பிரமணிய ஞானத்திலிருந்து அறியலாம்.

சட்டை முனியும் தனது சூத்திரத்தில்:
"ஓடுக்கமடா ஓங்காரக் கம்பமாச்சு
ஓகோகோ அகாரமங்கே பிறந்தாச்சு"
என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சிவன், சக்தி, சிவசக்தி மூலத்தைக் குறிக்கும் ஓங்கார மந்திரத்திற்க்கும் முதல் எழுத்தாகவும் இதுவே "அ" உள்ளது. அத்துடன் எழுத்துக்களைக் குறிக்குங்கால், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், சமஸ்கிருதம் முதலிய மொழியிலும் இதுவே முதல் எழுத்து.

"அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்கே உலகு"
*என்ற வள்ளுவர் முதல் குறள் மூலமும்,

அகஸ்த்தியபெருமான் தனது மெய்ஞான சுத்திரத்தில்,
அவ்வாகி உவ்வாகி மவ்வுமாகி,
—ஐம்பத்தோ ரெழுத்துக்கு ஆதியாகி"

"அகாமுதல் அவ்வைமுத்தும் ஆதியாகும்
அறிந்தோர்க்கு இதிலேதான் வெளியதாகும்"
என்று பாடியுள்ளதின் மூலம் நன்கு அறியலாம்.

## ஓம் என்னும் பிரணவம் 3

### உருவமும் — உடலும்.

உடம்பை உருவைக் குறிக்கும்போது ஏற்கனவே குறிப்பிட்டபடி இதுவே கருவில் தரிக்கும் பிண்டத்திற்குக் காரணமாய் விளங்குகிறது. ஆண்டவன் வ்வெழுத்தின் உருவமாய் உடம்பினுள் அமைந்துள்ளார் என்பது கீழ்காணும் மெஞ்ஞான முனிவர்களது சூத்திரம் மூலம் விளங்கும்.
"கண்டது அவ்வென்னுங் கடைய தோரட்சாம்,
பிண்டத்துக் குற்பத்தி பிறக்கு மிதிலே"
மச்சை முனி தீட்சை ஞானம்

"உந்தியினுள்ளே அவ்வும் உவ்வுமாய் மவ்வுமாகி
விந்துவாய் நாதமாகி விளங்கிய சோதிதன்னை"
அகஸ்தியர் முதுமொழி ஞானம்.

மேலும் இது வாயைத் திறந்தவுடன் நாக்கு, அல்லது மேல் வாயைத் தீண்டாமலேயே தொண்டையின் மூலமாய் பிறக்கும் ஓசை பேசும் போது உண்டாகும் எல்லா ஒலியையும் விட மிகவும் இயற்கையானது.

இது பற்றி யூகிமுனி தனது வைத்திய சிந்தாமணி 800—ல்

அவ்வென்னும் உட்சாத்தில் நாடிதோன்றும்
அந்நாடி தானின்று தத்துவந் தோன்றும்
எவ்வென்னு மெலும்பு தசை புடை நரம்பும்
ஈலிட்டு பழுவோடிரண்டு கொங்கையுமாம்
முவ்வென்று முட்டுக்கால் விளையீரெட்டாம்
முட்டியமைத் தங்ஙனே யோருருமாக்கி"

என்று கூறியுள்ளதன் மூலம் உருவம் உடம்பிற்கும் இதுவே முதல் காரணமென நன்கு தெளிந்து உணரலாம்.

ஓங்காரம், பிரவணம். இது எல்லா எழுத்து ஒலிகட்கும் முதலாக விருந்து அகத்தும், புறத்தும், இயற்கையாய் ஒலிக்கும் ஓசை. இது உந்தியின் கீழ் தங்கி நிற்கும். இதை விளக்கும்படி திருமூலர்,

"ஓங்காரம் உந்தி கீழ் உற்றிடும் எந்நாளும்
நீங்கா வகாரமும் நீள் கண்டத்தாயிடும்" என்று கூறியுள்ளார்.

ஓங்காரத்தி தத்துவம், அ,உ,ம் எனமித்து ஒலி எழுப்புவது.

அகாவொலி முதற்பிரிந்து படைத்தற் தொழிலையும், உகாரவொலி பின் தோன்றிக் காத்தல் தொழிலையும், மகாரவொலி முடிவாதலின் அழித்தற் தொழிலையும் ஆக முத்தொழிலையும் ஒருங்கே இணைத்து அடக்கி நின்றும்.

## ஓம் என்னும் பிரணவம் 4

"ஓம்" எனும் தாரக மந்திரத்தை தனிமையாக ஏகாந்த தியானம் செய்தால் இதன் பலன் அதிகம். ஐம்புலன்களின் தொழில்கள் இயக்கம் அடைந்து மனது நிலைபெறும். ஐம்புலக் கதவு அடைபடும். தன்னையும், உலகையும் மறந்து நிற்க, ஆசாபாசங்கள் மறந்து மனம் நிலைப்படும். குறுகிக் கிடந்த மனம் விசாலமடையும். மெய்ஞான விசாரணை விளைந்து, அதனால் வாழ்க்கையும் வேதனைகளும் இல்லாத ஒன்றாகிவிடும்.

இந்த விரிந்த அண்டப்பார்வை உண்டாகும்.

'ஓம்' என தியானிப்பதால் அநேக சித்திகள் கைகூடும். அதனால் ஒழுக்கம் ஏற்பட்டு உண்மை அறிவு இன்னதென்று நன்கு நமக்கு விளங்கும். இதன் மூலம் ஒளியை தரிசித்து மனத்திருப்தி, மெய், முகம் ஆகியவற்றில் ஒரு தெளிந்த பிரகாசமிக்க ஒளி, அறிவு உயர்ந்து மற்றோருக்கு வழிகாட்டும் தன்மையை நீங்களும் காணலாம்.

You see, there is no gain without pain.
ஆனால் முயன்றால் நிச்சயம் சாதித்துவிடலாம்.

ஒரே சமயத்தில் மனதின் வெவ் வேறு ஓட்டங்களை, நாம் விரும்பிய பாதைகளில் செல்லுமாறு செய்வதுதான் அடிப்படையானது. அப்படியொரு சாதனையைப் பழக்கப்படுத்திக் கொள்ளும்போது ஒரே நேரத்தில் மூன்று நான்கு காரியங்களிலாவது மனதை, கவனத்தைச் செலுத்தலாம். வேகமாக சிந்திக்கலாம். சிந்தனையின் பல படிகளைத் தாண்டி முடிபுகளை விரைவாக அடையலாம். Lateral Thinking போன்றவை.

## ஓம் என்னும் பிரணவம் 5

பலர் காயகல்பம் பற்றி கேள்விப்பட்டு இருப்பார்கள். இதை உண்டவர்கள் நரை, திரை மாறி பொன்போல் உடல் ஒளிர்ந்து ,— சாவில்லாது என்றும் இளமையுடன் வாழலாம் என்பர்கள். ஆயினும் அந்த காயகல்பம் கிடைப்பது அரிது. இருப்பினும் நாம் காயகல்பம் பெற ஒரு வழி உண்டு. அதிகாலை எழுந்ததும், இரவில் படுக்கப்போகும் பொழுதும் நாள் தவறாது பத்து நிமிட மணித்துளிகள் 'ஓம்' என்னும் மந்திரத்தை மனதால் உச்சரிக்க வேண்டும். உச்சரிக்கும்போது நமது மூக்கின் வலப்பகுதி துவார வழியாக காற்றை சுவாசித்து இடப்பக்க மூக்குத் துவார வழியாக காற்றை வெளியிட வேண்டும்.

இப்படி சூரிய பகுதியில் உஷ்ணமாக உள்ள காற்றை சந்திரப் பகதியில் குளிர்ச்சிப்படுத்தி வெளியேற்றும் பொழுது 'ஓம்' என்ற மந்திரத்தை மனதால் நினைந்தவாறு தொடர்ந்து செய்துவரவேண்டும். இங்ஙனம் வெளிச்செல்லும் பிராணன் குறைந்து குறைந்து இறுதியில் உள்ளேயே சுழலத் தொடங்கும். உள் சுழற்சியால் மூலாதாரத்தில் பாம்பு வடிவில் உறங்கிக் கொண்டிருப்பதாக சொல்லப்படும் குணடலி அல்லது குண்டலினி என்னும் சக்தி எழுப்பும். குண்டலியும் அடியுண்ட நாகம் போல் ஓசையுடன் எழும். இவ்வாறு எழும்பும் குண்டலினி ஆறு ஆதரங்களில் பொருந்தி சகஸ்ராரத்தில் சென்று அமுதமாக மாறிக் கீழ்வரும். (சித்தர்கள் 'விந்து விட்டவன் நொந்து கெடுவான்' என்பார்கள். காரணம் இந்த விந்துதான் பிரணாயத்தின் மூலம் குண்டலி வழி சகஸ்ராரத்தில் அடைகிறது. மேல் ஏநினால் பேரின்பம். கீழ் இறங்கினால் சிற்றின்பம்.)

யோகியர் நாவை மடித்து இதனை உண்ணுவார்கள். இந்த ஒரு சொட்டு அமுதம் சுவைத்தால் பசி, தாகம், தூக்கம் இல்லாது பன்னிரண்டு ஆண்டுகள் தவமிருக்கலாம். அதுவே சிவநீர் என்பார்கள். இதனை விழுங்கினால் நாமும் காயசித்தி பலனை அடையலாம்.

இதனை திருமூலர்:

"ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்கும்
காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாரில்லை

காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாளாக்குக்
கூற்றை உதைக்கும் குறியது வாமே" — என்கிறார்.

இருகாலும் என்பது இரு காற்று வழி இடகலை, பிங்கலை. அவ்வாறு இரண்டாகப் பிரிக்காது இரு வழியாகவும் மூச்சுக் காற்றை ஒரே முறையில் ஏற்றிப் பின்பு இறக்கிப் புருவமத்தியில் பூரிக்கச் செய்தல் வேண்டும். இவ்வாறு காற்றை முறையாக ஏற்றி இறக்கும் கணக்கை இவ்வுலகத்தார் அறியவில்லை. அவ்வாறு அறிந்தவர்கள் எமனை எதிர்த்து உதைக்கும் ஆற்றல் அறிந்தவர்கள்.

வாழும் கலை என்று மனிதரை நீண்ட நாள் வாழ வைக்கும் கலையினை நம் பண்டைப் பெருமைக்குரிய சித்தர்கள் 'தாம் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறுக' என்ற நோக்கில் தெளிவாக சொல்லியுள்ளார்கள்.

காயசித்தியின் பெருமையினை 'காகபுசண்டர்' பாடலைக் காண்போம்.

பாரப்பா பன்னிரண்டு முடிந்துதானால்
பாலகன் போலொரு வயது தானுமாச்சு
நேரப்பா இருபத்தி நான்கு சென்றால்
சீரப்பா முப்பத்தி ஆறுமானால்
சிறப்பாக மூன்று வயதாச்சுதப்போ
தாரப்பா பன்னிரண்டுக்கோர் வயதாய்த்
தான் பெருக்கி வயததுவை எண்ணிக் கொள்ளே...

ஒன்றில்லாமல் ஒன்றில்லை. இதனை மெய்பிக்கவே சிவனும் — சக்தியும்.

உலக மாந்தர்களும் அவ்வாறு எண்ணி ஒழுகல் வேண்டும். ஆணும் — பெண்ணும் சேர்ந்ததே வாழ்வு. வாழ்வில் இன்ப— துன்பம் எல்லாவற்றிலும் இருவருக்கும் சம பங்கு உண்டு என்பதை மெய்பிக்கவே, விளக்கவே அர்த்த நாரீஸ்வரர் உருவமாக சரிபாதி உடல்.

நன்றி வணக்கம்

# நவராத்திரி விழா


சி.பார்த்திபன்
நாவலர் தமிழ்ப் பாடசாலை மாணவன் இலண்டன்.

சைவ சமயத்தவர்கள் கொண்டாடும் விழாக்களில் நவராத்திரி விழாவும் ஒன்றாகும். சைவ சமயத்தின் முழு முதற்கடவுளாகிய சிவபெருமானின் ஒரு கலையான சத்தியை மூன்று வடிவங்களாகக் கண்டு வழிபடும் விழாவாக நம்முன்னோர் ஆக்கித் தந்த விழாவே நவராத்திரி விழாவாகும். மனித வாழ்க்கைக்கு வீரம், செல்வம், கல்வி இந்த மூன்றும் இன்றியமையாதவை. எனவே வீரத்துக்குத் துர்க்கையையும் செல்வத்துக்கு இலக்குமியையும் கல்விக்குச் சரஸ்வதியையும் வெவ்வேறு வடிவங்களாக ஊகித்து வழிபட வழிவகுத்துத் தந்துள்ளார்கள்.

இதைவைத்துக் கொண்டு சிவன் வேறு உமாதேவியார் வேறு பிள்ளையார் வேறு முருகன் வேறு என்று எண்ணிவிடக்கூடாது. சிறுபராயத்தில் அப்படி எண்ணினாலும் வயது ஏற அறிவு வளர உண்மையை உணர்ந்து கொள்ளல் வேண்டும். சிவன் மட்டும் கடவுள் என்றால் சிவராத்திரி விழா. அன்றுதான்நாம் கடவுளைச் சந்திப்போம். பல கலைகளாக பல வடிவங்களாக புராணக் கதைகளுடன் சேர்த்து அந்த ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதி வடிவான சிவனைப் பூசித்துப் பலன் பெற பலவிழாக்களை நம்முன்னோர் ஆக்கித் தந்துள்ளார்கள். இதனால் நாங்கள் வருடத்தில் பல நாட்கள் பல வாரங்கள் இறையுயணர்வைப் பெறுகின்றோம். ஆசாரங்களைப் பேணுகின்றோம். இதற்காகத்தான் பலவிதமான வழிபாடுகளைப் பல தெய்வங்களாக எண்ண வைத்து நம்முன்னோர் நமக்களித்தார்களோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

இந்த நவராத்திரி விழா தமிழர் வாழும் இடங்களில் எல்லாம் ஆண்டாண்டும் கொண்டாடப்பட்டு வருகிறது. ஆலயங்களிலும் வீடுகளிலும் கொண்டாடப்பட்டு வருவதோடு பொதுத் தாபனங்களிலும் பாடசாலைகளிலும் மதவேறுபாடுகளின்றிக் கொண்டாடப்படுவது பெருமைக்குரிய விசயமாகும்.

சிலர் ஆரம்பத்தில் கும்பம் வைத்துப் பூசை வழிபாடு தீபாரதனையுடன் பூசித்து வணங்குவார்கள். சிலர் இறுதி நாளில் மட்டும் கொலுக்களை வரிசையாக வைத்து பொங்கல், அவல், சுண்டல், படைத்துத் தீபாராதனை செய்து ஆடல், பாடல்கலை நிகழ்ச்சிகளுடன் கொண்டாடி மகிழ்வார்கள். அன்றைய தினம் சிறு குழந்தைகளுக்கு ஏடு தொடக்குதல் கலை வகுப்புகளை ஆரம்பித்தல் என்பன நடைபெறும். எனவே இது சிறுபிள்ளைகளைக் கவரும் விழாவாகவும் ஏனைய சமய சமூகத்தவர்களை ஆதரிக்கும் விழாவாகவும் திகழ்ந்து வருகின்றது. தமிழரின் பண்பு கலை கலாச்சாரம் பாரம் பரியங்களை இவ்விழா பேணி வருவதால் அன்று தொட்டு இன்று வரை சகல தமிழராலும் மதிக்கப் பட்டுப் போற்றப்பட்டு வருகின்றது. *



P.S. Ragu

# WELCOM CENTRE


# STAR MUSIC

## தரமான ஒலி ஒளிகள்

**FOREVER AND EVER GOOD QUALITY**

**OPEN 7 DAYS A WEEK 11.00AM-11.00PM**





திரை, இசை நட்சத்திரங்களின் புதிய- பழைய திரைப்படப் பிரதிகளையும், சீடி, சீடி வீடியோ, ஓடியோக்களையும், வார மாத தமிழ், ஆங்கில பத்திரிகைகள், சஞ்சிகைகளையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

**TEL: 0181 552 2727 / FAX: 0181 692 7759**

**209 HIGH STREET NORTH, EAST HAM, LONDON E6 1GH**

**TEL: 0181 472 6084**

**247, HIGH STREET NORTH, MANOR PARK, LONDON E12 6SJ**

KUMARANS

# குமரன்ஸ்

**Exports & Inports**

உங்களுக்குஅன்றாடம் தேவையான லீலா
தயாரிப்புகளை மொத்த விற்பனை
விலைக்கு தொகையாக வாங்கி உங்கள்
பணத்தைச் சேமியுங்கள்

**142, HOE STREET**
**WALTHAMSTOW,**
**LONDON E17 4QR**
**TEL: 0181 521 4955**
**FAX: 0181 521 9482**

லீலா தயாரிப்புகளின்
அங்கீகாரம் பெற்ற
விநியோகஸ்தர்கள்

# KUMARANS

லண்டனில் முதலாவது தமிழர் நகைமாளிகை
Specialist in 22 ct. Gold Jewellery

# Western Jewellers



**Creates the New Woman**

230 UPPER TOOTING ROAD,
LONDON SW 17 7EW

**Tel : 0181 767 3445**

வாரத்தில் ஏழு நாள்களும் திறந்திருக்கும்

சைவ முன்னேற்றச் சங்க பதிப்பகத்தில் வடிவமைப்பு செய்யப்பட்டு வாசன் அச்சகத்தினரால் ( Tel: 0181 646 2885)
இலண்டனில் அச்சிடப்பட்டு, சைவ முன்னேற்றச் சங்கத்தால் 20.11. 99 அன்று வெளியிடப்பட்டது.